ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—எ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுவரு மாசிமீ உசஉ (7-3-37) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௫௨.

## தோத்திரம்.

என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுடன் இளகமன தழலின் மெழுகாய்
இடையரு துருகவரு மழைபோ லிரங்கியே இருவிழிகள் நீரி றைப்ப
அன்பினால் மூர்ச்சித்த அன்பருக் கங்ஙனே அமிர்தசஞ் சீவி போல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்பி லாதஎனை யார்க்காக அடிமை கொண்டாய்
புன்புலால் மயிர்தோல் நரம்பென்பு மொய்த்திடு புலைக்குடிலில் அருவ ருப்புப்
பொய்யல்ல வேயிதனை மெய்யென்று நம்பியென் புந்திசெலு மோபாழிலே
துன்பமா யலையவோ வுலகநடை ஐயவொரு சொற்பனத் திலும்வேண் டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ் சோதியே சுகவா ரியே.

—தாயுமானசுவாமிகள்.

## வாழ்வு.

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

மலரினிலே மதுவுண்ணும் வண்டைப் போலே,
மண்ணுலகில் வாழ்வின்ப முண்ண வேண்டும்!
உலகோரை வருத்தாமல், யாசிக் காமல்,
உடையுணவுத் தேவைகளுக் குழைக்க வேண்டும்!
மலர் மணக்க, மங்கலச்சிற் றில்லெழுப்பி
வள்ளுவர்போல் மனமகிழ்ந்து வாழ வேண்டும்!
கலகமிலாக் கட்டில்லாக் கவலை யில்லாக்
களிப்புடைய மனத்துடனே கலக்க வேண்டும்! 1

பசித்திக்குச் சுசிருசியாய் உண்ண வேண்டும்!
பருகுநீர் சுத்தமா யிருக்க வேண்டும்!
வசிக்குமிடம் காற்றோட்ட மாக வேண்டும்!
வலிமையுற வுடற்பயிற்சி பயில வேண்டும்!
புசித்ததனைச் சீரணித்துப் புறத் துமிழ்ந்து,
புனிதமுறக் குடல்கழுவின் பிணிகள் வாரா!
விசித்திரமாம் ஐம்பூதக் கூடு தன்னில்
விளையாடும் பைங்கிளியே சொல்லக் கேளாய்! 2

கடலை,கனி, காய்,தானி யங்க ளுண்டு
கடவுளுக்கே நிவேதனமாய் வாழ வேண்டும்!
உடலையொரு கோயிலென மதிக்க வேண்டும்!
உய்யவொரு பொதுப்பணியை முயல வேண்டும்!
படபடத்துத் திரியாமல் நிதான மாகப்
பயனறிந்து, செய்குவன செய்ய வேண்டும்!
இடம்பமுடன் ஏழமையும் வெறுக்க வேண்டும்!
இருமைகளிற் பற்றிலா திருக்க வேண்டும்! 3

யார்வாழ்வும் சதமில்லை; அகிலந் தன்னில்
ஆவியுடன் உள்ளவரை யன்பு கொண்டு,
ஊர்வாழ உயிர்வாழ, உண்மை யான,
உன்னுண்ம சுகம்வாழ வாழ்க நன்கு;
பேர்புகழுக் கில்லை, வெறும் பேச்சிற் கில்லை;
பிறந்தவினை தீர்ந்துகடன் முடிக்க வேண்டும்!
நேர்மையுற முடித்தோர்கள் விடுபட் டுய்வர்;
தெளித்திடுவோர் தலைவிதியும் சுளித்துப் போகும்! 4

பாரால யத்தினிலுன் இயல்பிற் கேற்ற
பணிசெய்யத் தவம்செய்த பலனும்; என்றும்,
ஓரான்மா வென்றுன்னை நினைத்தா லஃதே
உயர்வான சகசநிட்டை யோக மாகும்
தாராள மாயன்பு செய்துன் னாலே
சக்தியுள துணைபுரிந்து, பக்தி செய்க!
ஏராள மாய்க்கற்ற பயனும்; இந்த
இயலுண்மை வழிநிற்றல் இன்ப மாமே! 5

—"லக்ஷ்மி"

வெட்ட வெளிப் பேதையன்யான் [illegible] சிட்டருடன் சேர் அனந்த தெண்டன் பராபரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபார தேவதாரு

# வளங்கள் பதிவுசெய்யப்பட்டன

இப்பத்திரிகையை வாசிக்கும்போது இக்கடுதாசி எப்படி, எங்கே உண்டாக்கப்படுகின்ற தென்பதைப்பற்றியும் இதை இன்னும் உண்டாக்குவதற்குப் போதிய அளவு தொழிற்படாத பொருள்கள் இருக்கின்றனவா வென்பதைப்பற்றியும், நீர், எப்பொழுதாவதுசிந்தித்ததுண்டா. அப்பொழுதுதான் மரமும், மரச் சோத்தியும் தற்கால நாகரீக வைபவத்தில் எத்துணை முக்கிய அம்சமாகத் தொழிற்படுகின்றனவென்பதையும் இதில் பணம் முதலிடுவதினால் எத்துணை லாபமுண்டு என்பதையும் உணருவீர்.

இப்பணமுதலீடு மிகப்பிரயோசனமுள்ளதும், 680தீவிரவளர்ச்சியுடையதும் அவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாத முடையதுமான தேவதாருமரங்களைக்கொண்டசொரியலான ஒரு ஏக்கர் நிலத்தைக் குறிக்கும்.



உலகின் எல்லாப்பாகங்களிலுமுள்ள அதி தீவிர சித்தமும் மிக்க உபாயமும் உள்ள வியாபாரிகளினால் இது வரையில் 500000 தங்கப்பவுண்கள், வியாபாரவளர்ச்சிச் சாதனங்களில் முதலிடப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நீங்கள் மிக்க சாவதான மானவும் செட்டானவும் பழக்கங்களிற் பேர்பேனவர்கள். ஆகவே இன்னும் மேலதிகமாக இதைப்பற்றி நீங்கள் விசாரிப்பீர்களானால் இப்பணமுதலீடு உங்கள் மனதைக் கவரவேண்டும். கவரும்.

ஒவ்வொரு சாதனமும் எடுக்கும்போது ரூ. 67 ச. 50ம் பின் 30 மாசங்கட்கு மாசாமாசம் ரூ. 13 ச. 50 கட்டவேண்டிய தோன்றுகும்.

மதிக்கப்பட்ட வரும்படி 2000 ரூபா முதல் 4500 ரூபா வரையில் ஒவ்வொரு 10—12 வருடங்கட்கும்.

"நியூஸிலண்ட்" நாட்டிலேயுள்ள வனம் 6-கோடியே 30 லட்சம் ஏக்கரிலிருந்து 1 கோடியே 20 லட்சம் ஏக்கராகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்த மரக்குறையை நிவிர்த்தி செய்வதற்குப் புதிதாகச் செய்கைபண்ணப்படும் வனம் 50 லட்சம் ஏக்கர் நடப்பட வேண்டியது அவசியம்.

இச்சங்கத்தின், இலங்கையின் பிரதான காரியாதிகாரி இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருக்கின்றனர். அவர் சாதனங்கள் புதிதாகச் சேருபவர்களுக்குக் கொடுக்கின்றனர். யாழ்ப்பாணக்காரியாலயத்திற்கு எழுதினால் அவர் சந்தோஷமாக உங்களை வந்து சந்தித்து இவ்வியாபாரத்தைப்பற்றி இன்னும் நன்கு விளக்குவார். அவர் வருவதினால் நீங்கள் எவ்வித கடமையும் உடையவர்களாகமாட்டீர்கள்.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.

தொழிலிலிருந்து இளைப்பாறியபின்னர் இப்பணமுதலீட்டின் பலனை அனுபவியுங்கள்,

உங்கள் குழந்தைகட்காக.

அவர்களுக்கு நல்ல கல்வியூட்டுவதற்கு நிச்சயம் பண்ணிவைத்தல் ஒவ்வொரு பெற்றாரின் பெருமையும் கடமையுமாகும்.

## "சீ. பி. எவ்." சாதனங்கள்

நஷ்டம்தராதபடி பத்திரப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை நினைவு கூருங்கள்

இலங்கையின்
பதிவுபண்ணப்பட்ட காரியாலயம் :-
ஹொங்கொங் வங்கிக் கட்டிடம்,
கொழும்பு

யாழ்ப்பாணம் காரியதரிசி
சுப்பிரமணியம்-நாகலிங்கம்
நெடுந்தெரு, காங்கேசன்துறை

10-5-36.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணை 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

**விளம்பர விகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—எ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: தாதுவரு மாசிமீ உ௩உ (7-3-37) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—௩௨

## எங்கள் எதிர்காலம்

(சிலக்கூர் இலங்கைத் தமிழர் சங்க நிலையத்திற்கூடிய பொதுக்கூட்டத்தில் ஸ்ரீமான் சி. சின்னத்துரை அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு.)

—திரு. வி. சக்திவேல்.

(முற்றொடர்)

### கல்வி

முதலாவதாக நமது நாட்டில் இப்பொழுது நிலவிவரும் கல்விமுறை திருத்தி அமைக்கப்படல் வேண்டும். தாய் மொழியே அறிவூட்டுதற்குச் சிறந்த மார்க்கமாதலால் கல்வி தாய் மொழியிற் கற்பிக்கப்படுவது நன்று. சீவியத்தில் லக்ஷியத்தை அடைதற்கு அநுகூலமாக விருத்தலே கல்வியின் பயனாகும். ஆதலால் மக்களிடத்தே அதி சூக்குமமா யடங்கியிருக்கும் சக்தியை வெளிப்படுத்திப் பலதுறைகளிலும் முன்னேறச்செய்வதே கல்வி பயில்வதன் நோக்கமாயிருத்தல் வேண்டும். சீவியத்துக்கு அவசியமானவைகளையெல்லாம் மாணுக்கர்களுக்குப் போதிப்பதும், அவர்கள் நெறி பிறழா வாழ்க்கை நடத்தப் பழக்குவதும் அவசியமாகும். பாமர ஜனங்களுக்குக் கட்டாயக் கல்வி புகட்டப்படல்வேண்டும். இக்காலத்தில் நடப்பதுபோலல்லாமல் தொழில் எதுவாயினென் கௌரவிக்கப்படல் வேண்டும். அதற்குரிய போதனைகள் ஊரெங்கும் போதிக்கப்பட்டுவருதல் நன்று.

இயல்புடையவர்கள் விருப்பம் போல் ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளையும் பயிலலாம். ஆனுல் நாமெல்லோரும் மனிதர்களென்பதையும், பாஷைகள் பலவாயினும் அறிவு ஒன்றே என்பதையும் மறந்துவிடலாகா. மேதாவிகள் எச்சாதியிலும் காணப்படுகின்றனர். அவர்கள் அளித்த அறிவுப் பொக்கிஷங்கள் உலகிற்குப் பொதுவாயுள்ளன. ஆகவே ஒருபாஷை மற்றவைகளிலும் பார்க்கச் சிறந்தது. அல்லது ஒரு சாதியினர் மற்றுஞ் சாதியினரிலும் அறிவாளிகள் எனக் கூறுவது பொருந்தாது.

### விவசாயம்

விவசாயம், கைத்தொழில், வாணிபம் முதலியவைகளில் நாம் போதிய கவனம் செலுத்துதல் அவசியமாகும். நாட்டின் தேவைக்குரிய பொருட்களும் நல்ல வருமானத்துக்குரிய பொருட்களுமே நாட்டில் விளைவிக்கப்படல் வேண்டும். பூமிக்குத் தக்கதாய் நெல், சிறுதானியவகை, மரக்கறி முதலியன ஏராளமாய் விளைவிக்கப்படுவதோடு பழமரங்களும், தென்னை, புகையிலை, பருத்தி முதலியனவும் பயிரிடப்படல்வேண்டும். இவைகள் கிருஷிக சாஸ்திரப்படி பயிர்செய்யும் முறைகள் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குப் பயிற்றப்படுதல் நன்று. ஆடு மாடுகளை அதிகமாய் வளர்ப்பதால் போதியளவு பாலைப் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு விவசாயத்துக்கு அவசியமாகும் எருவும் வேண்டியவளவு கிடைக்கும். பாலின் தேவையைப்பற்றி நான் உங்களுக்குக் கூறத் தேவையில்லை. பாலே உணவுகளிலெல்லாஞ் சிறந்ததெனக் கருதப்படுகின்றது. இஞ்ஞான்று எங்கள் ஊரில் ஆரோக்கியம் குறைந்து காணப்படுகின்றமைக்கு ஓர் காரணமாயிருப்பது போதியவளவு பால் கிடையாமையும், பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல பலன் கொடாமலிருத்தற்குப் போதியவளவுஎரு விடப்படாமையுமேயாகும். இதனுலன்றோ பண்டைஞான்று நம்முன்னோர் ஆடு மாடுகளை வளர்ப்பதில் அதிக கவனஞ் செலுத்தி வந்தனர். மாடு தெய்வமாகக் கொண்டாடப்பட்டது இதுகாரணம்பற்றியேயாம்.

யாழ்ப்பாணத்திற் குடிசனம் பெருகி வருகின்றமையால் அங்கு குடியிருப்பதற்கும் பயிரிடுவதற்கும் போதிய நிலங்கள் அகப்படுவதற்கில்லை. முன் ஒருவருக்கு இருந்த நிலம் இப்பொழுது பலரிற்கிடையே பகிரப்படவேண்டியிருக்கின்றது. ஆகவே இது சமயத்தில் யாழ்ப்பாணத்தவர் இலங்கையிலுள்ள பிறபாகங்களில் அல்லது பிறநாடுகளில் குடியேறவேண்டிய அவசியமா வெனும் கேள்வி எழுகின்றது. இக்கேள்விக்குப் பதில் கூறப்புகில் இந்நாட்டிலே சீவியத்தின் பெரும்பாகத்தைச் செலவழித்த நாங்களும், இங்கேயே பிறந்து வளர்ந்த எங்கள் பிள்ளைகள் முதலியவர்களும் இந்நாட்டிலேயே குடியேறுவது விரும்பத்தக்கதெனவே நான் கூறுவேன். எனினும், இது விவாதத்துக்குரிய ஓர் விஷயமாயிருத்தலின் இதுபற்றி இன்னும் அதிகமாய்ச் சொல்ல நான் விரும்பவில்லை.

### வாணிபம்

வாணிபத்தில் நாம் வெகுதூரம் பின்னணியில் நிற்கிறோம். நம் நாட்டு வியாபாரம் முழுமையும் அன்னியர் கையில் இருக்கிறதென நான் முன்னரே கூறியுள்ளேன். சில அரிய சந்தர்ப்பங்களைத்தவிரப் பெரும்பான்மையாய் இத்துறையில் எம்மவர்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் அபலமாயின. அதற்கு முக்கிய காரணமாயிருப்பன எம்மவர்க்குப் போதிய வியாபாரக் கல்வியும், அனுபவமும், நன்மதிப்பும் இல்லாமையேயாம். எமது துர் அதிஷ்டம் வாணிபத்தைச் செட்டாகச் செய்யும் முறையை நாம் கற்றுக்கொள்ளவில்லை. வாணிபம் தந்நம்பிக்கை, தன்னைக் கட்டுப்படுத்தல் முதலிய நற்குணங்களை உற்பத்திசெய்யும். வாணிபத்தில் ஜெயம்பெறவேண்டுமாயின் வியாபாரக்கல்வி இன்றியமையாததாகும். சுயநலம், நம்பிக்கையீனம், சுயமரியாதையின்மை முதலியவைகளும் எங்கள் வியாபார ஸ்தாபனங்களின் வீழ்ச்சிக்கு உதவிபுரிந்து வருகின்றன. இத் தீயகுணங்களின் பெறுபேறுப் வியாபார ஸ்தாபனங்கள் மாத்திரமன்றி எத்தனையோ

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

ஈழத்தறிஞர்

## ஸ்ரீமான் கு. கதிரவேற்பிள்ளை அவர்கள்.

[ஆகாயவசனி நிலையத்தில் வெள்ளவத்தை, திரு. குல. சபாநாதன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு]

(முற்றொடர்)

### கவிவன்மை

பிள்ளையவர்கள் பரடுமாற்றல் உடையராயிருந்தும் அதன்கண் அவரது புலன் சென்றிலது. சில தனிச் செய்யுட்களும் சாற்றுகவிகளும் இயற்றியுள்ளார். சொற் செறிவும் பொருட் செறிவுமுடைய பாவியற்றும் வன்மையைக் காட்டற்கு அகராதியில் கூறியிருக்கும் கடவுள் வணக்கச்செய்யுளொன்றே போதுமானது.

"திருவா ருலகஞ் சிருட்டித் தளிக்கும்
அருவார் பொருட்டென் னகம்"

இது வழிபடுகடவுள் வணக்கமும் எற்புடைக் கடவுள் வணக்கமும் ஒருங்கு குறிப்பிட்டவாறும். அகராதி யென்பது எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான நூல். எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான கடவுளை அவ்வச்சமயம் அழைக்கும் பெயராற் குறிப்பிடாது 'அருவார்' என வாழ்த்தியது மிகப் பொருத்த முடைத்து. இச் செய்யுளின் சிறப்பை நன்கு விளகுவதானல் பிறிதோர் நீண்ட கட்டுரையாகிவிடும்.

இனி, சாற்றுகவிகளுட் சிலவற்றைக் காட்டுவாம். நாடகப் புலவர் எனப் பெயர்பெற்ற நாகேசஐயர் புத்திரன் வட்டுக்கோட்டை சிவசுப்ரமண்ய சிவாசாரியார் கி. பி. 1895-ல் இயற்றிய கந்தசட்டிப் புராணம் எனும் நூலிற்குப் பிள்ளையவர்கள் சொல்லிய சாற்றுகவி:

"கந்தசட்டி மாநூலைக் கன்ன மிர்த
மெனத், தந்ததமிழ்க் களி தசகவி—
முந்துசிவ, சுப்பிரமணிய சிவசாரிய னுன்
குனு சொற்சீர்க், கொப்புண்டோ நாகேச
வோதி.

கி. பி. 1886-ல் சதாசிவப் பிள்ளையவர்கள் இயற்றிய 'பாவலர் சரித்திர தீபகம்' எனும் நூலிற் களித்த சாற்றுகவி.

"என்னுலை நண்பன் சதாசிவ நாவல
னித்தரையிற், பொன்னுசை நான்கினும்
போற்று புலவர் புகழுடம்பு, மின்னு தொ
ழிந்திடக் கால வினைஞன் விளைவித்த
விருள், பின்னா விக்கச் சரித்திரத்தை
யீவுகுப் பெய்தனனே.

அராலி மேற்கில் வாழ்ந்த இராமலிங்கஐயர் இயற்றிய சந்தான தீபிகைக்கு கி. பி. 1901 ல் நடராசையர் பொழிப்புரையுரை யெழுதியதைக் கண்டு பாடியது.

'சந்தான தீபிகை தன்குல ராமலிங்
கையன்றா, ஐந்தான மாம்பய னுய்ந்த நட
ராச வைபனுரை, தந்தா தரித்தனன் சோ
திடம் வல்ல தமிழறிஞன், சிந்தா மணியிந்த
டைதை யெனக்கொண்டு தேறகவே.

வட்டுக்கோட்டை மகா வித்வான் மு. ஆறுமுகம்பிள்ளை எழுதிய எட்டாம் புத்தகத்திற்குப் பிள்ளையவர்கள் கொடுத்த சாற்றுகவி.

"ஆறு முகக்குரு வட்டுநன் னுடன்
அமிழ்தறவு, நாறு முகத்துச்சிறவ ரிலக்
கிய நன்றுணர்ந்து, தேறும் பரிசித்த எட்
டாகும் புத்தகஞ் செய்ததந்தான், ஆறு
மறம்வரப் பெண்களுங் கற்கு மழகுறமே.

பிள்ளையவர்கள் அரசசேவையினின்றும் கி. பி. 1898-ல் இளைப்பாறிய காலந்தொடக்கம் அகராதி தொகுக்கும் வேலையில் இராப்பகலாக உழைத்து வந்தார்கள். இதனுற் சில சமயங்களில் நித்திரையின்றியும் நெடுநேரமிருந்து வேலை செய்துவந்தார். இதனை நிறைவேற்றிவிடவேண்டுமென்னும் விருப்பால் ஐந்து வருடம்வரை இடையீடின்றி யுழைத்து வந்தார். உடற்றளர்ச்சியைப் பொருட்படுத்தாது முயற்சித்தமையால் 1904-ம் ஆண்டு மாசிமாதமளவில் நோய் குடிகொண்டது. ஊரிக்காட்டிற் சுகத்திற்காகச் சிலகாலம் தங்கியிருந்தார். இருந்தும் மனம் கேட்கவில்லை. மீட்டும் அவ்வேலையை முற்றுவிக்க முயன்றார். மனவார்வத்திற்கேற்ற உடம்பின்மையால் நோய்வாய்ப்பட நேர்ந்தது. நல்லூருக்கு வந்து சேர்ந்து சில கிழமைகளாகப் படுக்கையிலேயே கிடக்க நேர்ந்தது. தக்க வைத்தியர்கள் மருந்து கொடுத்து வந்தார்கள். கடைசிவரை நல்லறிவோடிருந்து 1904-ம் ஆண்டு சித்திரைத்திங்கள் பதினுன்காம்நாள் இவ்வுலக வாழ்வைநீத்த திறைவன் நீழலிற் குளிர்ந்தார்.

பிள்ளையவர்கள் காலஞ் சென்ற செய்தி காட்டுத் தீயெனப்ப யாழ்ப்பாணம் முற்றும் பரவிற்று. மக்கள் திரள்திரளாக வந்து கூடிவிட்டார்கள். பிள்ளையவர்களின் பிரிவால் சுற்றத்தவர் ஒரு கற்பகதருவைப் பறிகொடுத்தனர். வழக்கறிஞர்கள் நடுநிலைமை கோடாத நீதிபதியையிழந்தார்கள். ஈழமண்டலப் புலவர்கள் சிறந்தவள்ளலையிழந்தார்கள். தமிழர்கள் தமிழ்க்கடலை நிலைகண்டுணர்ந்த தலைவனையிழந்தார்கள். தமிழ்த்தாய் அகராதியெனும் ஆபரணத்தைத் தனக்கணிவித்து மகிழ்வித்த தன் மகனையிழந்தாள். பிள்ளையவர்களின் பிரிவாற்றலைப் பொறுக்காது யாவரும் கவலைக் கடலுளாழ்கினர் எனவே சாலும். கிறீஸ்தவமுறைப்படி பாதிரியாரின் பூசை முடிந்தபின் பிரேதத்தைச் செம்மணிச் சுடலையில் தகனஞ் செய்தார்கள்.

பிள்ளையவர்கள் அகராதி முறையும் நிறைவேற்றிருரெனினும், அதனை அச்சுர்த்தியேற்றிக் கண்டின்புறும் பாக்கியத்தைப் பெற

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

காரியங்களை மந்திரிகளுக் கொ[illegible] செய்யாத அரசன் கோபத்தால் அவர்களைச் சீறின் அவன் செல்வங் கெடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளறிவும் புதிய வாழ்க்கையும்.

(கே. ஸீ. வீரராகவையர் எம். ஏ., எல். டி.)

எந்தத் தேசத்து ஜனங்களிடத்தில் பொருளறிவு ஆழ்ந்து பரவியிருக்கிறதோ, அந்தத் தேசத்து மக்கள் புதிய வாழ்க்கை நலன்களை அனுபவித்து நாகரிக மேம்பாட்டை அடைந்தவர்கள் என்று பொதுவாகப் பெரியோர்கள் கருதுகிறார்கள். பொருளறிவு என்பது என்ன? பூமியிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள பொருள்களை நமது ஐம்புலன்களின் மூலமாய் அறிந்து, அவைகளின் குணங்களையும், உள் அமைப்பையும், உபயோகங்களையும் ஆராய்ந்து தெளிவுபெறுவதே பொருளறிவு எனப்படுகிறது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன், ருஷியா, இத்தாலி முதலிய மேல்நாடுகளில் வசித்த அறிஞர்கள் பொருளறிவைப் பெரிதும் பெருக்கி, முற்போக்கையடைந்து, சமூக வாழ்விலும், கைத்தொழில்களிலும், ராஜிய விஷயங்களிலும் பல பெரும் மாறுபாடுகளைச் செய்திருக்கின்றனர்.

பொருள்கள் பூமியிலிருந்தும் சமுத்திரத்திலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் கிடைக்கின்றன. பூமியை நன்றாய் உழுது, பக்குவப்படுத்திப் பயிரிட்டால் பழுதில்லாத பலபொருள்கள் விளைகின்றன. அவைகள் நெல், துவரை, பயறு, தினை, சாமை, கொள்ளு, எள்ளு, கடலை, உழுந்து ஆகிய நவதானியங்களும், கோதுமை, யவம், கரும்பு, கிழங்கு, காய், பழம், காபி, தேயிலை, புகையிலை, பருத்தி, ரப்பர் முதலியவைகளும் பிறவும் ஆகும். மேலும், பூமியில் இயற்கையாகவே பல பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன. அவைகளை அடைவதற்குப் பலர் முயற்சிசெய்து ஐயாயிரம் அடிவரை பூமியைக் கீழே தோண்டிப் பயன்பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கின்றவைகளே தங்கம், வெள்ளி, பாதரசம் முதலியனவும், ஈயம், தகரம், செம்பு, இரும்பு, அலுமினியம், நாகம் முதலிய மூலப்பொருள்களும், நிலக்கரி, மண்ணெண்ணெய் முதலியனவும்; இவை தாதுப்பொருள், கனிஜப்பொருள், நிரசப்பொருள் என்று பலவகையாகச் சொல்லப்படுகின்றன.

மேலே சொல்லிய பொருள்கள் ஒவ்வொருநாட்டிலும் ஒருங்கே காணப்படுவதில்லை. பூமத்தியரேகைக் கருகிலுள்ள நாடுகளில் சூரிய ஒளியும் வெப்பமும் மிகுந்திருப்பதால், அங்கு விவசாயப் பொருள்கள் நன்கு விளைகின்றன. குளிர்தேசங்களில் விளைவன வேறுவகையாகும்; உணவுப் பொருளும் வித்துப் பொருள்களும் அவ்வளவாக அங்கு விளைவதில்லை. ஆகவே குளிர்தேசத்து மக்கள் உஷ்ணதேசத்துப் பொருள்களை அடைய விரும்புவது இயற்கையாகும். அதனாலேதான் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகள் ஆபிரிக்கா, ஆசியா, தென்னமெரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள உஷ்ணப் பிரதேச நாடுகளைத் தத்தம் ஆதிக்கத்தில் அடையப் போட்டி போடுகின்றன.

இயற்கையில் கிடைக்கும் விவசாயப் பொருள்களையும் நிரசப்பொருள்களையும் ஆதாரமாகக் கொண்டு செயற்கைப் பொருள்கள் பல செய்யப்படுகின்றன. இயற்கைப் பொருள்களைவிட இச் செயற்கைப் பொருள்கள் எண்ணிக்கையில் மிகுதியாகி வருகின்றன. இச் செயற்கைப் பொருள்களைச் செய்வதில் எத்தனையோ அறிஞர்கள் தமது வாழ்நாளைச் செலவிட்டு, இயந்திரங்களின் உதவிகொண்டு பல சூழ்ச்சிகளைக் கற்பித்து, பொருளறிவை ஓங்கி வளரும்படி செய்திருக்கிறார்கள். இப்படி வளரும் பொருளறிவின் பயன்களை நாம் நேரில் பார்த்து அனுபவிப்பனவும் இன்றியமையாதனவாகத் தோன்றுவனவுமான ரயில், மோட்டார், ஏரோபிளேன், கிராமபோன், ரேடியோ, போட்டோ, சினிமா, டாக்கி முதலியன. இவைகளை மிகுதியாக்கி, பாமரர்களும் அனுபவிக்கும்படி செய்யும் தேசங்களே நாகரிக நாடுகள் என மேல்நாட்டு மேலோர் கருதுகின்றனர்.

மேலே சொல்லிய சாதனங்களைச் செய்வதற்கு அடிப்படையாகவுள்ளன நிலக்கரியும் இரும்பும். இரும்பு அப்படியே இயற்கையில் கிடைப்பதில்லை; பிராணவாயுவுடன் சேர்ந்து, இலகுவில் பிரிக்கமுடியாத ஆக்ஸைடாகக் கிடைக்கின்றது. ஆனால் பொன்னும், வெள்ளியும், செம்பும் இயற்கையில் அப்படியே கிடைக்கும். ஆகவின் மனிதன் முதலிலே தேடி அடைந்து உபயோகித்தவை அவைகளே. பின்னர்ச் செம்பும் தகரமும் சேர்ந்து உருக்கப்பட்டதால் வெண்கலம் கிடைத்தது. அதனாலே பண்டைக்காலங்களில் ஒருபகுதி "செம்புக்காலம்" என்றும், வேறொருபகுதி "வெண்கலக்காலம்" என்றும் கருதப்படுகின்றன. இக்காலத்தில் இரும்பு பெரிய உலைகளில் இலகுவாகச் செய்யப்பட்டு அபரிமிதமாக உபயோகப்படுவதால் நமது காலம் "இரும்புக்காலம்" என்று சொல்லப்படுகிறது. இந்த நிலக்கரியும் இரும்பு ஆக்ஸைடும் ஏராளமாக இங்கிலாந்தில் அகப்பட்டதால், அத்தேசத்து அறிஞர்களும் வினையாளர்களும் அதனைத் தேடியடைந்து உபயோகித்து, இரும்பையும் எஃகையும் பெருவாரியாகச் செய்து, நீராவி யந்திரம், ரயில் வண்டிகள், நீராவிக் கப்பல்கள், வேறு பல இரும்புக்கருவிகள் முதலியவற்றைச் செய்வதில் இந்த இரும்பையும் எஃகையும் உபயோகித்தார்கள்; சுகவாழ்வைப் பெற்றார்கள்; பிறதேசங்களுக்குச் சென்றார்கள்; தங்களது விடாமுயற்சியாலும், தெய்வ பக்தியாலும், சமயோசித நடத்தையாலும் "சூரியன் என்றும் மறையாத பூமி"யின் பாகங்களை ஆள ஆரம்பித்தார்கள். அங்கங்கே கிடைக்கும் பொருள்களின் இயற்கையையும் உபயோகங்களையும் அந்நாட்டு அறிஞர்கள் ஆராய்ந்தறிந்து நாகரிக வாழ்வை உயர்த்திவந்தார்கள்.

இங்கிலாந்து தேசத்து வீரர்களும், அறிஞர்களும், வியாபாரிகளும் செய்தது போல, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி முதலிய தேசத்து மக்களும் முயற்சிசெய்ய எத்தனித்தனர். நாகரிக வாழ்விற்கு அத்தியாவசியமான பொருள்கள் தமது நாடுகளில் கிடைக்காததனால், அவைகளிருக்கும் பிற நாடுகளைக் கவர ஆசை கொண்டார்கள்; ஆசை உண்டானதால், எந்த உபாயத்தைச் செய்தாவது அவைகளையடையப் பிரவிர்த்தி உண்டாயிற்று; அப்படிப்பட்ட பிரவிர்த்தி எதிராளிகளுடைய நன்மைக்கு விரோதமானதாக ஏற்படுவதால், சண்டையும் சச்சரவும் உண்டாயின. சென்ற இரண்டுமூன்று நூற்றாண்டுகளில் நடந்த பலதேசத்து விவரங்களெல்லாம் இப்படிப்பட்டவைதான். அதனாலே, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, முதலிய பிரதேசங்களில் ஐரோப்பாக் கண்டத்து அறிவாளிகளும், வீரர்களும், வியாபாரிகளும் உட்புகுந்து, தத்தமக்குக் கிடைத்த பூபாகங்களைப் பொத்திக் கொண்டு, அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப் பிரதேசங்களின் பொருட்டுத்தான், 1914—1918ல் பெரிய ஐரோப்பிய யுத்தம் நடந்தது. அதே காரணத்தால்தான், சென்ற அபிஸீனிய-இத்தாலிய யுத்தம் நடந்தது. இனி வரப்போகிற யுத்தங்களும் அந்தக் காரணத்தாலேயே ஏற்படும்.


மண்ணாசையானது, பாரதப் போர் வீரர்களையும், ஹனிபால் அலெக்ஸாண்டர், ஸீஸர், நெப்போலியன், கெஸ்லர் முதலிய போர் வீரர்களையும் தோன்றச் செய்தது. "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பதற்கிணங்க அவர்கள் கடைசியில் தங்களது ஆசையை நிறைவேற்ற முடியாது தோற்றுத் தொலைந்து போயினர். இந்திய நாட்டிலுள்ள விளைபொருளும் இயற்கைப்பொருளுமே பிறர் மனத்தைக் கவர்ந்து பல நூற்றாண்டுகளாக அவர்களது படையெடுப்புக்கும் ஆதிக்கத்துக்கும் காரணமாயின. கிரேக்கர்கள், மொகலாயர்கள், துருக்கர்கள், போர்துகேசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இங்கிலீஷ்காரர்கள் முதலியோர் முறையே அடுக்கடுக்காக நமது நாட்டுக்கு வந்த காரணம், நம் நாட்டு நீர் வளமும் நில வளமுமே யாகும்.

இப்பொழுது நாகரிகமடைந்த ஒவ்வொரு நடும் தனது பிரதேசத்திலே நாகரிக வாழ்விற்கு வேண்டிய பல பொருள்களையும் கண்டுபிடித்து விருத்திசெய்ய முயன்று வருகிறது. உதாரணமாக, விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் முக்கியமாக வேண்டிய 'நைட்ரேட்' பொருள் மிகப் பழங்காலத்தில் இந்தியாவிலிருந்தும், பிற்காலத்தில் தென் அமரிக்காவிலுள்ள 'சிலலி' நாட்டிலிருந்துமே கிடைத்தது. இப்பொழுது இவ்விரண்டு நாட்டையும் விலக்கிவிட்டு, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாட்டறிஞர்களும் வினையர்களும் ஆகாயக் காற்றிலுள்ள நைட்ரஜன், ஆக்ஸிஜன் ஆகிய இரண்டு தனிப்பொருள்களிலிருந்தும் அந்த அவசியப் பொருளைச் செய்து தனித்தியங்க முற்பட்டுவிட்டனர். மேலும், இக்காலத்தில் மோட்டார் ஏரோப்ளேன் ஆகிய இரண்டும் வேலை செய்வதற்கு அத்தியாவசியமான பொருள் 'பெட்ரோல்' ஆகும். அது ருஷியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பர்மா முதலிய தேசங்களில் தான் அகப்படுகிறது. அங்கிருந்துதான் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாட்டினருக்கு அது கிடைக்க வேண்டியிருக்கிறது. அதனாலே அந்நாட்டு அறிஞர்கள் சென்ற பத்து வருஷங்களில் நிலக்கரியிலிருந்து 'பெட்ரோல்,' 'மொபிலாயில்' முதலிய எண்ணெய்களைப்பெறும் உபாயங்களை ஆராய்ந்து தெரிந்து கண்டுபிடித்துள்ளார்கள். அம்முறைகளைப் பின்பற்றி இயந்திர வினைஞர்கள் அப்பொருள்களை இலகுவில் குறைந்த செலவில் ஏராளமாக உற்பத்தி செய்யும் ஏற்பாட்டை நடத்தி வருகிறார்கள். இன்னும், மணலைக் கயிறாகத் திரித்தும், தடாகச் செய்தும், கண்ணாடி ஏனங்களுக்குப் பதிலாகப் பெரும் உஷ்ண நிலை வித்தியாசங்களால் உடைபடாத 'குவார்ட்ஸ்' ஏனங்களைச் செய்துமிருக்கிறார்கள்.

இப்படிப் பொருளறிவுப் போராட்டம்பெருகி நாகரிகவாழ்வு மேம்படுவதாயிருப்பினும், மனிதனது இராஜஸ, தாமஸ குணங்களே ஓங்கி வளருகின்றன. நீதி வழுக்களும் மிகுதியாகி, காமம், கோபம், பொய், கொலை, வஞ்சகம் முதலியவைகளே அதிகரித்து வருகின்றன. இந்தியாவின் பொருள்கள் பிற நாட்டுக்கு


நேரம் தவறாது வேலை முடிக்கவும்
நிதானம் தவறாது படம் பிடிக்கவும்
வேண்டுமாகில்

| அளவு |
|---|
| 3½"×2½" குவாட்டர் |
| 4"×5" போஸ்ட்காட் |
| 6½"×4¾" கபினற் |
| 8½"×6½" புள் |
| 12"×10" றேயல் |
| 15"×12" ஸ்பெஷல் |



| விலை | ரூ. | ச. |
|---|---|---|
| 3 படங்கள் | 2 | 50 |
| ,, ,, | 3 | 50 |
| ,, ,, | 6 | 00 |
| ,, ,, | 12 | 00 |
| ,, ,, | 17 | 00 |
| ,, ,, | 22 | 50 |

வெளிப் பிரயாணங்களுக்கு பிரத்தியேகச் செலவு!

LILLY STUDIO
MAIN STREET, JAFFNA.
லில்லி ஸ்ரூடியோ
முதலாயிருக்கும்.

கிளை ஸ்தானம்:
பெரியகடை ஆஸ்பத்திரி ரோட்டு,
36-ம் நம்பர், பெரிய தெரு;
யாழ்ப்பாணம்.


செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன், வெருவந்து வெய்து கெடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை திருத்தம் என்பது அறிந்தோ அறியாமலோ நேர்ந்த தவறுகளைத் திருத்திக் கொள்ளுதலாம். அப்படிச் செய்வதனுலே தவறு நீங்கி, தவறின்மை உண்டாதல்போல, சீர்திருத்தம் என்பதும் சிறப்பாயுள்ள சீரைத்திருத்திக் கொள்ளுதலாம். அப்படிச் செய்வதனுலே சிறப்பாயுள்ள சீர் நீங்கிச் சீர்கேடு உண்டாகும். சீரைத் திருத்தப் புகுந்த உலகம் இதனையே சீர்திருத்தமென்று மெச்சி மெச்சி உச்சிமேற் கொள்ளுகின்றது. இதனைப்பற்றிய சில அனுபவங்கள் பின்வருமாறு:—முள்ளும் கல்லும் பள்ளமும் மேடும் கரடும் முரடுமான தெருக்களுள்ள அந்தக் காலம்போய் அத்திபாரமிட்டு-கல்லிட்டு-தாரிட்டு செப்பனிடப்பட்ட தெருக்களையுடைய இந்தக்காலம் வந்துவிட்டது. அந்தக்காலத்திலே போக்குவாவுக்காக அமைக்கப்பட்ட வண்டிகளினுல் இடறுண்டு உயிரை இழந்தவர் ஒருவருடத்திலே ஒருவர்தானுமில்லையென்று துணிந்து கூறலாம். இந்தக்காலத்திலோ வென்றால் தெருவில் நடந்து செல்வோர் வீட்டுக்குத் திரும்பி வருவாரென்பது சந்தேகம். சந்திகளெல்லாம் எலிகளை இரண்டு துண்டாக்கும் வீமன் பொறிகளாயின. சாதாரணமான ஒரு நகரத்திலே ஒவ்வொருநாளும் ஒருவர் மோட்டர் வண்டியினுல் இடறுண்டு இறப்பரென்றும், ஒரு சிலர் கையை அல்லது காலைப் பறிகொடுப்பரென்றும், சிலர் மோதுண்பரென்றும், பலர் அபாயத்தினுட்படுவரென்றும் சொல்லலாம். நாம் அடைந்த பிரதானமான சீர் திருத்தங்களுள் இதுவுமொன்றாகும்.

* * *

விபரீத நாகரீகமுடையார் சீர் திருந்தாத காலம் என்று குறிப்பிடும் அந்தக் காலத்திலே வியாச்சியங்கள் குறைவு. கத்திக்காய வழக்குகள் மிகவும் குறைவு. கொலைவழக்குகள் அதிகம் குறைவு. நீதிமன்றங்களும் அரிதாயிருந்தன. அவர்கள் சொல்லும் நாகரீகம் மிகுந்துள்ள இந்தக் காலத்திலே நாலு ஐந்து மைலுக்கொரு பொலிஸ்கோடும் ஆங்காங்கெல்லாம் கத்திக்காய வழக்குக்களும் மலிந்தன. வியாச்சிய மிகுதி காரணமாக டிஸ்திறிக்கோடுகளும் அதிகப்படலாயின. அந்தக் காலத்திலே சுப்பிறீங்கோட்டு வழக்குகள் ஒரு ஆறு ஏழு வரையிற்றான் உண்டு. அவைகளுள்ளும் ஒன்றுதான் கொலைவழக்காகவிருக்கும். சில காலங்களிலே கொலைவழக் கில்லாமலுமிருக்கும். விசாரணையும் ஒருவாரம் வரையில் முற்றுப்பெறும். "சீர்" என்பது திருத்தமடைந்த இந்தக் காலத்திலே சுப்பிறீங்கோட்டு வழக்குகளும் இருபத்தைந்து முப்பது வரையில் வந்துவிட்டன. விசாரணைக்காலமும் ஒருமாதம் ஒன்றரைமாதம்வரையி லாகின்றன. இந்தச் சீர்திருத்தம் இன்னமும் திருத்தப்பட்டு உச்சநிலையை அடைய, வருடம் முழுவதும் சுப்பிறீங்கோட்டு விசாரணை நடைபெறுங் காலமும் வந்துவிடும். நாம் அடைந்த சீர்திருத்தங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இன்றும் வேண்டப்படுவனவாயினும், இக்காலத்தில் இந்தியாவில் தலைமுறை தத்துவமாக விளங்கிவரும் வேதவாக்கியங்களும், புத்தர்பிரான் முதலிய பெரியோரின் அருள் மொழிகளும், அருள், பொறை வாய்மை, ஞானம் போன்ற சத்துவ குணங்களுமே மேல் நாட்டுப் பொருளறிஞர்களுக்கும், விஞையறிஞர்களுக்கும், ராஜீயவாதிகளுக்கும் சாந்தத்தை அளித்துச் சமாதானத்தை நிலவச் செய்யும் யோக்கியதை யுள்ளனவாகத் தோற்றுகின்றன. அவைகளை யாவரும் அடையுமாறு எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக.

—"கலைமகள்."

# சீர் - திருத்தம்

C. C. S.

உடை நடை பாவனைகளிலும் சீரை அதிகமாகத் திருத்திவிட்டோம். மேல்நாட்டாராயினும் கீழ்நாட்டாராயினும் ஆடவரயுள்ளோரிடத்திலே உடையைப்பற்றிய சீர்திருத்தம் அதிகமாக ஏற்படவில்லை. உடை விஷயமாகப் பெண்பாலார் எவரும் காத்திராப்பிரகாரம் முன்னேறிச் சீர்திருந்திவிட்டனர். திறந்த வேலைப்பாடுடைய நகைகளைப் பின்பற்றி உடையும் அவைபோலாயது. இன்னும் சிலகாலஞ் செல்ல மேலும் மேலும் திருத்தமேற வேற உடை விஷயமாகப் பணச்செலவேனும் சிரமமேனும் இல்லாது முடியும். இந்த விஷயமாக நாடகங்களும் படக்காட்சிகளும் உல்லாச வனங்களும் கடற்கரைகளும் ஓர் அளவில், கலாசாலைகளும் இன்றியமையாத் துணைபுரிகின்றன. உடை விஷயமாக ஆடவர்கள் அதிக பின்னணியில் நின்றாலும் சீர்திருத்த மில்லாததென்று அவர்கள் சொல்லும் அந்தக் காலத்து மீசையைச் சீர்திருத்திய ஆடவருடைய நுண்ணறிவும் அருமையும் பெருமையும் இக்காலச் சீர்திருத்தத்தை நன்கு புலப்படுத்துகின்றன. இந்தச் சீர்திருத்தம் அதிசமீப காலத்திலே ஒரு மயிரும் இல்லாமற்செய்துவிடும். இன்னேரன்ன நவீன முறைகளினுலும் எமது சீர்திருத்தம் இவ்வளவாக வந்துவிட்டது.

* * *

சென்ற வாரம் யாழ்ப்பாணத்துக் கல்லூரி ஒன்றில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலே பிரசாரகர் ஒருவர் எமது நாட்டை (A little Chicago) "சின்னச்சிக்காக்கோ" என்று குறிப்பிட்டாராம். (எந்தக் கல்லூரியில் என்றும் பிரசாரகர் யாரென்றும் நாம் அறிவேம். நாம் அவர்மீது சிறிதும் துவேஷமில்லேம்; ஆதலால் விஷயத்தில்மாத்திரம் புகுகின்றேம்) எமது நாட்டிலே பகற்கொள்ளை அதிகப்பட்டுவிட்டதம்; வீடுடைத்துத் திருடுவோர் அதிகரித்துவிட்டார்களாம்; எங்கும் தாலியறுப்புத் தலையெடுத்துவிட்டதாம்; இன்னும் என்னென்னவோ எல்லாஞ் சொன்னுராம். அவருடைய பிரேரணையை நாம் மனமார அநுவதிக்கின்றேம்; அத்துடன் இக்காலச் சீர்திருத்தங்கள் இவையும் இவைபோன்ற பிறவுமாமென்று பிரசாரக அன்பருக்கு ஞாபகப்படுத்துகின்றேம். இவ்வளவில் எமது முடி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது விரதங்கள் 2.

## மகா சிவராத்திரி

மயிலை-ஸி. எஸ். ஜகதீசசுந்தரம்பிள்ளை

சிவராத்திரி விரதமாவது மாசி மாதத்துக் கிருஷ்ணபக்ஷத்துச் சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக்குறித்து அனுட்டிக்கும் விரதமாம். வேதங்களுள்ளே சாமவேதம் போலவும், யாகங்களுள்ளே அசுவமேதயாகம் போலவும், நதிகளுள்ளே புனித நதியாகிய கங்கா நதியைப் போலவும், தேவர்களுள்ளே காத்தற்றொழிலையுடையவராகிய மகாவிஷ்ணுவைப் போலவும், விரதங்களுள்ளே சிவராத்திரி விரதமே சிறந்த விரதமாம்.

முன்னொரு கற்பகாலத்திலே பிரமதேவர் அழிந்து, உலகம் முழுதும் பிரளயம் முடியும் ஊழிக்காலத்து இரவிலே-தொட்டுணரக்கூடிய மையிருளிலே (Palpable darkness) எம்பிராட்டியாராகிய உமாதேவியார் நாலு யாமமும் சிவபூசை செய்து அருணோதயத்திலே எம்பெருமானை நோக்கி நான் வழிபட்ட இவ்விராத்திரியானது சிவராத்திரியெனவும், இவ்விரதத்தினைக் கிரமப்படி அனுட்டித்துப் பூசை புரிபவர்கள் முத்திபெறல் வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டனர். அவிர்சடைக் கடவுளும் அங்ஙனமே ஆகுக என்று வரங் கொடுத்தருளினர். ஆதலால் சிவராத்திரியென வழங்கப்படலாயிற்று.

இந்தமகா சிவராத்திரியிலே, உபவாசஞ் செய்து நான்கு யாமமும் நித்திரையின்றிப் பத்தியோடு சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாமபூசையும் அவ்வக்காலத்திற் செய்வது உசிதம். ஒரே காலத்திற் சேர்த்துப் பூசிப்பது மத்திமம். பரார்த்தம் ஆண்மார்த்தம் என்னும் இரண்டினும் சிவராத்திரி நான்கு யாம பூசையிலேயே தேவர் முதலிய கணங்களுக்கும் சோமாஸ் கந்தமூர்த்தி முதலிய மூர்த்திகட்கும் பூசைசெய்ய வேண்டியதில்லை. ஆன்மார்த்தத்திலே மகாலிங்கத்துக்கு மாத்திரம் பூசை செய்தல்வேண்டும். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகருக்கு மாத்திரம் நான்கு யாம பூசையும் செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர் நித்திரையின்றிக் கண்விழித்திருந்து ஸ்ரீபஞ்சாக்ஷரமுஞ் செபித்துத் தேவார திருவாசக பாராயணமுஞ் செய்து நான்கு யாமமும் சிவாலய தரிசனமும் தரிசித்தல் வேண்டும். இந்நாளிலே உபவாசமிருத்தல் அவசியம். நீரேனும் பாலேனும் பருகுதல் மத்திமம். பழம் உண்பது அதமம். தோசை, வடை, இட்டளி, பணிகாரம் கொழுக்கட்டை, பிட்டு, உப்புமா முதலியவைகளை உண்பது அதமாதமம்.

சிவராத்திரி தினத்திலே இரவிற் பதினான்கு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலமாதலால் நான்கு யாமமும் நித்திரையொழிக்க இயலாதவர் இலிங்கோற்பவகாலம் நீங்குவரையிலாயினும் நித்திரை யொழித்தல் வேண்டும். இக்காலத்திலே ஆலயதரிசனஞ் செய்வது புண்ணியம். இவ்விரதத்தினை விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் இந்திரனும் மற்றையதேவர்களும் முனிவர்களும் மற்றையோரும் அனுட்டித்து இஷ்டசித்திகளையடைந்தார்கள். ஆதலால் நாமும் அனுட்டித்தல் அவசியம்.

---

### புதிய சீட்டுச் சட்டம்

புதிய சீட்டுச் சட்டம் அடுத்த ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அனுசரணைக்குக் கொண்டுவரப்படும்.

மேற்படி சட்டத்தின்கீழ் அரசாங்கசபையினால் சமீபகாலத்தில் அங்கீகரிக்கப்பட்ட விதிகளை மே. த. கவர்னர் கூடிய சீக்கிரம் அங்கீகரிப்பாரென்று அறியப்படுகிறது.

---

# இந்தியச் செய்திகள்

### காங்கிரஸ் சபையும் பதவியும்

சமீபத்தில நடந்தேறிய தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் அடைந்த வெற்றியைப்பற்றி யாவரும் அறிவர். ஆறுமாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் அதிகதொகையினராகத் தேர்தலில் சித்தியடைந்துள்ளார். சென்ற சனிக்கிழமை வார்டா நகரில் காங்கிரஸ் காரிய நிர்வாகசபையினரின் கூட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியினர் பதவிகளை ஏற்பதா? அன்று? என்ற விஷயம் நன்கு ஆலோசிக்கப்பட்டது. இச்சபையில் அங்கத்துவம் வகிப்போரில் பெரும்பான்மையோர் பதவிகளை ஏற்க வேண்டுமென்ற விருப்பமுடையாராகக் காணப்பட்டனராம். பண்டிதர் ஜவஹரலால் நேருவும் அவ்வித விருப்பமுடையாராம். உதவாததும் தீமையை விளைவிக்கும் தன்மையதுமான புதிய அரசியற்றிட்டத்தை உடைத்துத்தகர்த்தற்பொருட்டு காங்கிரஸ் கட்சியினர் பதவி ஏற்பதே சிறந்தவழி யென்பது பண்டிதர் அபிப்பிராயம். தேசாதிபதியின் விசேஷ அதிகாரம் நினைத்தவாறு உபயோகிக்கப்படாதெனை அரசினர் உறுதிகூறின் பதவிகளை ஏற்கலாமென்பது மகாத்மாவின் அபிப்பிராயமாம். இஃது எப்படிக் கூடும். விசேஷ அதிகாரமே புதிய அரசியற்றிட்டத்தில் அரசினர்க்கு ஆதாரமாயுள்ள அதை எப்படி விட்டுக் கொடுப்பர். காங்கிரஸ் கட்சியினர் பதவி ஏற்பதா? அன்று? என்ற விஷயம் இம்மாதக் கடைசியில் கூடவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபையில் முடிவு செய்யப்படுமாம்.

### மகமதிய அரசியற்சபை

தற்போது நடந்தேறிய தேர்தலில் மகமதிய அரசியற் சபையின் பேரால் அபேட்சகராக முன்வந்தோர் அதிக சித்தியடைந்தாரில்லையென அச்சபையின் தலைவராகும் மெஸ். M. A. ஜின்னு அவர்கள் புலம்புகின்றார்கள். இச்சபை மிகுந்த வகுப்புவாதம் கிளப்பி நின்றதுபற்றி அநேக மகமதிய தேசீயவாதிகள் இச்சபையின் ஆதரவில் அபேட்சகராக தேர்தலில் முன்வரவில்லை. பம்பாய் ஒழிந்த மற்றைய மாகாணங்களில் இச்சபையினர் முயற்சி கைகூடவில்லையென்றே கூறவேண்டும். சிலமகமதியர் காங்கிரஸ் கட்சியின் ஆதரவிலும், அநேகர் தன்னிஷ்டக் கட்சியின் ஆதரவிலும் அபேட்சகராகநின்று தேர்தலில் வெற்றியடைந்தனர். இனியாவது மெஸ். ஜின்னுவகுப்பு வாதத்தை மிக உக்கிரமாக நாடிச் செல்வதை நிற்பாட்டக்கூடாதா? தேசீய நோக்குடன் காங்கிரஸ் சபையுடன் கலந்து உழைப்பின் இந்தியா இதுவரையில் விடுதலையடைந்திருக்குமே.

### சென்னையில் காங்கிரஸ் வெற்றி

சமீபத்தில் நடந்த தேர்தலில் எந்த மாகாணத்திலும் பார்க்கக் காங்கிரஸ் கட்சியினர் சென்னை மாகாணத் தேர்தலில் அடைந்த வெற்றி பெரிதும் போற்றப்படவேண்டியதே. 215 அங்கத்தவர்களை மொத்தமாகக்கொண்டதாகும் புதிய சட்டசபையில் 169 பேர் காங்கிரஸ் கட்சியினராயின் அக்கட்சியினர் அடைந்த மகத்தான வெற்றி சிறிதாகுமா? இவ்வெற்றியைக் குறித்து மிக வியந்து பல்வேறு தலைவர்களும் சென்னைக் காங்கிரஸ் தலைவர்கட்குச் செய்திகள் அனுப்பியுள்ளார். சென்ற 15 வருடமாக சென்னை அரசியலில் அதிகம் ஆதிக்கத்தைச் செலுத்திவந்த ஜஸ்டிஸ் கட்சியினர்க்கு ஆக 15 ஸ்தானங்களே கிடைத்தன. அக்கட்சித் தலைவர்கள் பொப்லி மகாராஜா உட்பட யாவரும் தேர்தலில் பெருந் தோல்வியடைந்தனர். காங்கிரஸ் சபைமாட்டுப் பொதுசனங்கள் எவ்வளவு ஆர்வமுடையரென்பது இதனால் நன்கறியப்படும்.

### மந்திரிகளை நியமித்தல்

காங்கிரஸ் கட்சியினர் அதிக தொகையினராகத் தேர்தலில் சித்தியடையாத மாகாணங்களில் பாஞ்சாலம், வங்காளம் என்னும் இருமாகாணங்களும் பிரதானமானதே. இம்மாகாணங்களில் வசிப்போர் பெரும்பான்மையாக மகமதியர். வகுப்புவாதம் இங்கு மிதந்தியும் தலைவிரித்தாடுவது பிரசித்தம். இம்மாகாணத்தில் எந்தக் கட்சியாவது தனித்து ஆதிக்கமடையவியலாது. ஆகையால் அரசினர் இம்மாகாணங்களில் பல்வேறு கட்சித் தலைவர்களையும் தேசாதிபதி அழைத்து மந்திரிசபை ஏற்படுத்துவதைக் குறித்து யோசிக்கின்றாராம். மந்திரிசபையினரின் நாமங்கள் விரைவில் வெளியாகுமென கூறப்படுகின்றது. மற்றைய மாகாணங்களில் மந்திரிசபையை ஏற்படுத்துவதுதான் பெருங்கஷ்டம். எல்லாம் காங்கிரஸ் கட்சியினரின் முடிபான தீர்மானத்தையே பொறுத்தது.

### கைதியாக்கப்பட்டனர்

இந்தியச் சட்டசபையின் அங்கத்தவருள் ஒருவராகும் மெஸ். பக்த சந்தசோனி என்பவர் சடுதியாகச் சென்ற. வாரம் கைதியாக்கப்பட்டுப் பின் ஒருலட்ச ரூபா பிணையில் விடப்பட்டிருக்கிறார். சட்டசபையில் விவாதத்துக்கு வரவிருக்கும் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள சில பிரதானமான விஷயங்களை இவர் ஏற்ற காலத்துக்கு முன் இரகசியமாக சில வியாபாரிகட்கும் வேறு தொழிற்கட்சியினர்க்கும் வெளியிட்டனரென்பதே இவர்மீது ஏற்பட்ட குற்றமெனச் சொல்லப்படுகிறது. அரசியல் இரகசியங்களை வெளியிடுவதால் பெருநட்டங்கள் ஏற்படுமென்பதை அங்கத்தவர் நன்கறிவர். இவர் இந்த நியமத்தை மீறினதாலேயே சங்கடத்துள்ளானர்.

### வெளியேறினர்

சென்ற சனிக்கிழமை இந்திய சட்டசபையில் அங்கத்துவம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர் ஒரேதிரளாகச் சபையை விட்டு வெளியேற நேர்ந்தது. இதற்குக் காரணம் அரசாங்கப் பண இலாகாத் தலைவரான சேர். ஜேம்ஜ்கிறேக் என்பவர் காங்கிரஸ் பிரதிநிதி யொருவரை அவதூறாப் பேசியதே அவதூறான வார்த்தையை அகற்றிவிடும்படியும் அதைக் கூறியதற்காக மன்றாட்டம் கேட்கும்படியும் சட்டசபைத் தலைவராகும் சேர். அப்துல்ரஹிம் அவர் கூறியும், சேர். ஜேம்ஸ்கிறிக் அவர்கள் இணங்கினரில்லை, தாம் கூறியதை வேறு சொற்களால் சொல்லவியலாதெனச் சாட்டுக் கூறினர். தலைவரும் இவ்விஷயத்தில் பின் பராமுகமாயிருந்தமையால் காங்கிரஸ் கட்சியினர் தமது மரியாதையைக் காப்பாற்றும்பொருட்டு ஒருங்கு சேர்ந்து வெளிச்சென்றனர். தலைவர் இவ்விஷயத்தில் திடமாக நிற்காதமையாலேயே சங்கட மேற்பட்டதென்பது எமது அபிப்பிராயம். பிழையாக நடந்தவர் வெள்ளையரானபடியால் அதைக் கண்டிக்கத் தலைவர் பதுங்கினராயின் அது மிகவும் வெட்கத்துக்கிடமாகும். தலைவர் பதவியில் காலஞ் சென்ற ஸ்ரீமான். V. J. படேல் போன்றவர் இருந்தால் இப்படி நடக்குமா?

---

# Order Nisi.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

Testamentary Jurisdiction } *No. 360*

*In the Matter of the Estate of the late Thanaledchumy wife of S. Kanagasabapathy of Uduvil.*

Deceased

**Sabapathippillai - Kanagasabapathy of Uduvil**

Petitioner

Minors {
**1. Kanagasabapathy Saravanapavan**
**2. Kanagasabapathy Somasundaram**
**3. Akileswari daughter of Kanagasabapathy**
**4. Kangsabapathy Thiagarajah all of do**

**5. Nannithamby Appasippillai of Mallagam**

**The 1st to 4th Respondents are minors appearing by their guardian-at-litem the 5th Respondent.**

Respondents

This matter of the petition of the abovenamed Petitioner praying for Letters of Adminstration to the estate of the abovenamed deceased Thanaledchumy wife of S. Kanagasabapathy coming on for disposal before C. Coomaraswamy Esquire, District Judge, on the 29th day of October 1936 in the presence of Mr T. S. Kanagaratnam Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 6th day of July 1936 having been read, it is declared that the Petitioner is the husband of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall, on or before the 19th day of March 1937 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 26th day of February 1937.

**Sd. C. Coomaraswamy**
*District Judge.*

(283) 7-3-37—2

---

### உடன்கட்டையேறிய பெண்

அலகபாத்தில் ஒரு குர்மி வகுப்பு ஸ்திரீ தனது மணப்பெண் உடையை அணிந்துகொண்டு இறந்த தனது கணவனுடைய பிரேதம் வைக்கப்பட்ட தீயின் மீது ஏறி வெந்து சாம்பலானாள். இச்சம்பவம் கிராமவாசிகள் மனதில் ஆழ்ந்த உணர்ச்சியை உண்டுபண்ணியதால் அவர்கள் குறித்த இடத்தில் ஓர் கோயில் கட்டத் தீர்மானித்திருக்கிறார்களாம். இம்மாகாணத்தில் சிறிது காலத்திற்கு முன்னரும் இவ்வித சம்பவமொன்று நடைபெற்றதாம்.

### 301 பாம்புகள் கடித்தும் சாகாதவர்

ஜோகன்னஸ்பர்கில் ஜான் கென்றி கார்டனை எத்தனையோ கொடிய விஷ இனங்களைச் சேர்ந்த 301 பாம்புகள் கடித்திருக்கின்றன. ஆனால் அவர் ஒவ்வொரு பாம்பு கடித்த சமயத்திலும் சிரித்துக்கொண்டிருந்தார். சமீபத்தில் ஒரு நல்லபாம்பை அவர் முத்தமிட்டார். அப்பொழுதும் அவர் கடிக்கப்பட்டார். ஆனால் வழக்கம் போல் அவர் சிரிக்கவே செய்தார் 302-வது பாம்பு அவரைக் கடித்த சமயத்திலும் அவருக்குச் சிரிப்பு ஏற்பட்டது. ஆனால் அச்சிரிப்பு அவருடைய உயிரையும் அடித்துக் கொண்டு போய்விட்டது.

---

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல, தில்லை நிலக்குப் பொறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழகேசரி" நிலையத்தில் 6-3-37ல்,

மாகாண வைத்திய அதிகாரியாயிருந்து இளைப்பாறிய

டக்றர் S. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில்

இலங்கை அரசாங்கசபைத் தலைவர் கௌரவ ஸ்ரீமாந்.

# வை. துரைசுவாமி அவர்களுக்கு அளித்த வரவேற்பு உபசாரணை.

## உபசாரப் பத்திரம்.

அன்பார்ந்த ஐயா!

அரசாங்க சபையின் தலைவராம் உயர்தனிப்பெரும் பதவியைத் தாங்கள் பெற்றதன் நிமித்தம், நமக்குண்டான ஆநந்தத்தையும், மனத்திருப்தியையும் இச்சமயம் வெளிக்காட்டற்குத் தாங்கள் தருணம் அளித்தமைக்காக, "ஈழகேசரி" யின் அதிபர், ஆசிரியர், தொழிலாளர், அபிமானிகளாகிய நாங்கள் தங்கட்கு நன்றி பாராட்டுகின்றோம். மேலும் ஆறுவது ஜோர்ஜ் அரசரின் மகுட அபிஷேகவிழாவிற்கும் இலங்கைவாசிகளின் பிரதிநிதியாகத் தாங்கள் செல்லவிருக்கும் இங்கிலாந்து யாத்திரையும் சிந்தாயாத்திரையாகுக.

நெடுங்கால அரசியல் வாழ்க்கையை உடைய தாங்கள், பொதுவிஷயங்களில் மிக விரிந்த நோக்கும், பின்வரும் விஷயங்களை அனுமானித்தறியும் சக்தியும், உண்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற கோட்பாடும் பொருந்தியவராயிருந்தமையாலேயே, இலங்கையிலுள்ள பல்வேறு வகுப்பினரினது நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றீர்கள். பல்வேறு வகுப்பினர்க்கிடையில் அவநம்பிக்கையையும் விரோதத்தையும் உண்டாக்கக்கூடிய எதையும், பேச்சினாலாவது செய்கையினாலாவது கிளப்பிவிடாத தங்கள் வாழ்க்கை முறையும் நம்மால் போற்றப்படவேண்டியதே. பரஸ்பரம் வகுப்பினர்க்கிடையில் நம்பிக்கையும் நட்பும் ஏற்படுவதாலேயே, நமது நாடு விடுதலை அடையும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இலங்கைத் தமிழ்மக்களின் பிரதிநிதியாகிய நீங்கள், அவர்களின் நன்மைகளையும் உரிமைகளையும் வேண்டியபோதெல்லாம் பாதுகாத்து வந்தீர்கள். அவைகளை எடுத்துக்காட்டி மற்றையோர்க்கு விளக்குங்கால், மிக உறுதியாக நின்று துவேஷம் பாராட்டாது உண்மைகளை எடுத்துரைப்பதை யாவரும் மிக ஆர்வத்துடன் கேட்டுவந்தனர்.

இனிமேலும், அதாவது, எத்தனையோ விசேஷ சம்பவங்கள் ஏற்படவிருக்கும் வருங்காலத்திலும்—பெருமைபொருந்திய தங்களது தலைமையில், எல்லா விஷயங்களும் நன்மையடையுமென்ற பூரண நம்பிக்கை எமக்குண்டு. கட்சிபேதங்களில் தலையிடாதிருந்து, அரசாங்கசபைத் தலைமையை வகிக்க வேண்டிய காலத்திலும், அதன் பின்னரும், தாங்கள் தேசாபிமானத்தால் உந்தப்பெற்றவர்களுடன் ஒருங்கு சேர்ந்து, நமது நாடாகும் இலங்கைத்தேசம், பொறுப்பாட்சியைப்பெறத் தொண்டாற்றுவீர்களாக. மேலும் இங்கிலாந்துக்கு யாத்திரையிற் செல்லுங்கால், உள்நாட்டு மந்திரியாகும் சேர் D. B. ஜெயத்திலக்கா அவர்களுடன் கூடிச்செல்வதும் நற்பேறேயாகும். இருவரும் இச்சமயத்தில் பரஸ்பர நம்பிக்கையுடன் கலந்து வார்த்தையாடித் தேசமுன்னேற்றத்துக்கு ஏற்ற வழிகளை வகுக்கும் தருணமுண்டாகுமென எண்ணுகின்றோம்.

இப்பத்திரத்தை வாசித்து முடிவுக்கு வருமுன், உங்கள் வாழ்க்கையைக் குறித்து நமது சிந்தையில் எழும் ஓர் எண்ணத்தை எடுத்துரைக்க வேண்டியதாகின்றது. இப்பொழுது மகிமையுடன் எமது தலைவராக இருப்பதற்குக் காரணம், தாங்கள் கீழ்ப்படிவுள்ளவராய் இருந்தமையாலன்றோ. அளியா உண்மையும் சமயமும் வடிவினைப்பெற்றாலென்ன, ஆயிரக்கணக்கான தேசமக்கள் உள்ளக் கிளர்ச்சியை எய்துவிக்கும் அரியவோர் பெரியார்மாட்டுத் தாங்கள் கொண்ட பக்தியும் மதிப்புமே தங்களை நடாத்தும் அரிய சக்திகளாகுமென நாங்கள் நன்கறிவோம். இது என்றும் எமது ஞாபகத்தைவிட்டு நீங்காது.

நமது நாட்டின் தேசியபாக்கியமாகத் தங்களை நாங்கள் மதிக்கின்றோம். நிறைந்த தேகாரோக்கியமும், நீடிய ஆயுளும் பொருந்தப்பெற்று, எமது பிறப்புரிமையாம் சுயராச்சியத்தைப் பெற்று அதைத் தேசத்தவர்க்கு அளிக்கும் பெருமை உண்டாகத் திருவருள் உங்களுக்குக் கூட்டிவைப்பதாக.

"ஈழகேசரி" நிலையம்,
சுன்னாகம்,
6-3-37.

இங்ஙனம்,
**உங்கள் நண்பர்கள்,**

## வாழ்த்துப் பாக்கள்.

### வெண்பா

செந்தமிழாம் பைங்கூழ் செழித்துவளர் யாழ்ப்பாணப்
பைந்தொடியா ளெம்மன்னை பாற்றோன் றும்—சுந்தரஞ்சேர்
புத்திரனே யெங்களுக்குப் பொன்றாப் பெரும்புகழை
வைத்தவனே நித்தமுநீ வாழ்.

ஈழத்து மாமணியே யெங்களுக்கோர் கற்பகமே
ஆளுமர சாங்கசபை யாகுமது—வாழவொரு
மேன்மைத் தலைவனென மேவினாய் நின்புகழை
யாமெச்ச லென்னே வினி.

### விருத்தம்

அறிவுய ராண்மை வீர மகத்திலஞ் சாமை நேர்மை
குறைவிலாக் கலையின் மாண்பு குணத்திலே யுயர்ந்த கொள்கை
மறுவிலாத் தூய வுள்ளம் மன்னர சாங்க மன்றின்
உறுவதோர் தலைமை யுற்றாய் உனையின்று வாழ்த்து வோமே.

சைவத்தின் வாழ்வே யீழத் தாய்செய்த தவத்தின் பேறே
பைவைத்த சேடன் றாங்கும் பார்புகழ் பரவும் பண்போய்
பொய்யற்ற புலவோ ரேத்தும் அரசியற் றலைமை பூணல்
தெய்வத்தின் செயலே யென்று தேர்ந்தனம் சிறந்தே நெஞ்சில்.

அறிஞரி லறிஞ நீயே யரசியற் றலைமைச் சேவை
புரிவதற் கருக னாய் பூரித்த தெங்க ளுள்ளம்
தருமமே ஜெயமா மென்ற தத்துவத் துண்மை தந்தாய்
பெருமித மெமக்கே ஐயா! பெரும! நீ! வாழி வாழி.

### கலித்துறை

குன்றாத மேன்மைக் குணமணி யீழக் குலத்துமணி
பொன்றாத சீர்த்தி மணிதேச சேவையைப் பூண்டமணி
நன்றாகு மெம்மர சாங்க சபைக்கொரு நாதமணி
ஒன்றா யெமைப்புரக் குந்துரைச் சாமி யுயர்மணியே.

மன்னர் புகழர சாங்க சபைக்கொரு மாதலைவன்
என்னும் பதவியும் சைவச் சமரசத் தின்கொள்கையும்
நின்னி லிருப்பதைக் கண்டன மேயந்த நிச்சயத்தால்
மன்ன! வுனைத்துரைச் சாமியென் றோதவொர் மாண்பெமக்கே.

### வெண்பா

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாயென்ன—ஆன்றபுகழ்
வள்ளுவனார் சொன்ன மரபின்யாழ்ப் பாணவன்னை
யுள்ளமகிழ்ந் தாள்கண் டுனை.

### விருத்தம்

வாழி மாமறை வான்முகில் வாழிய
வாழி யந்தணர் மன்னவர் வாழிய
வாழி மேழியர் மன்னுயிர் வாழிய
வாழி யெந்துரைச் சாமியும் வாழ்கவே.

"ஈழகேசரி" நிலையம்,
சுன்னாகம், 6-3-37.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுமையொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

— அப்பர்சுவாமிகள்

யாழ்ப்பாணம், சுன்னுகம்;
தாதுஸு மாசிமீ உசஉ

## எமது நிலையத்தில்

பொன்னுடைய இலங்காபுரியின் சிரோரத்தினமாக விளங்கும் யாழ்ப்பாணப் பெருமகவும், தனிப்பெருந் தலைவருமாகும் கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமியவர்கள், அரசாங்கசபைத் தலைவராம் அதியுன்னத பதவியைப் பெற்ற பெருமையைக் கொண்டாடும் நோக்கமாக, நேற்று ஈழகேசரி நிலையத்தில் ஒரு கொண்டாட்டம் நடத்தப்பட்டது. நமது தலைவர்க்கு இதுவரையில் செய்யப்பட்ட உபசாரங்கள் சிலவன்று. அவர் அரசாங்க சபைத்தலைவராம் பதவியைப்பெற்று ஒரு வருடமாயினும், இன்னும் உபசாரங்கள் நடந்தேறுவதிலிருந்து, இப்பெரியார்மாட்டுச் சனங்கட்குள்ள மதிப்பு இம்மாத்திரமென ஓரளவிற்காயினும் ஊகித் தறியக்கிடக்கின்றது. அன்றியும் அரசாங்கசபைத் தலைமையை, நடுநின்று எவர்க்கு மொப்பக் கட்சி சாராது நடாத்தும் பெருமாண்பும், தகுதியும் இவர்க்குண்டென்பதை யாவரும் அறிவார்கள். இவ்வித அரியபெரிய குணங்களமையப்பெற்ற நமது தலைவர் அவர்கள் இலங்கைவாசிகளின் முதற் புருடராக மதிக்கப்படுவது சாலவும் பொருத்தமுடைத்தே.

இப்பெரியார்க்கு உபசாரஞ் செய்தமையால், நமது பத்திரச்சிறுவனும் "ஈழகேசரி"யும் பொற்புடன் மதிப்பும் பெற்று ஆதிக்கமு மடையப்பெற்றனனென்பது எமது அபிப்பிராயமாகும். எமது பத்திரிகையின் விருத்தியில் என்றுஞ் சிந்தை வைத்துள்ள அரசாங்கசபைத் தலைவர்க்கு, மேற்படி பத்திரிகையின் பேரால் உபசாரம் ஏற்படுவதும் பொருத்தமே. ஈழகேசரி (இலங்கைச் சிங்கம்) யாக விளங்கிய சேர். பொன். இராமநாதன் அவர்களின் பின், இப்போது அப்பட்டத்தைத் தாங்கும் தகுதியும் குணங்களும் வாய்ந்தவர் ஸ்ரீமான். வை. துரைசுவாமி அவர்களே என்பதை எவரும் மறுக்கமாட்டார். யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்களின் தலைவராவது மன்றி, மற்றைய வகுப்பினரின் தலைவராகவும் எமது தலைவர் விளங்குகிறுரென்பதை நாம் மறவாதிருப்பதும் அவசியம்.

ஸ்ரீமான். துரைசுவாமியவர்கள் இத் தனிப்பெரும் பதவியை அடைதற்கு அவர்மாட்டுக் காணப்படும் கடவுள் பக்தியும், நடுநிலைமையுமே காரணமாயினவென்று கூறவேண்டும். ஏனைய தலைவர்கள்போலன்றி வகுப்புவாதமாம் இழுக்கால் பீடிக்கப்படாது, தேசமுனனேற்றத்தை யாவர்க்கும் ஒப்ப நாட்டவேணடும் என்பதே, அவரது பிரதம கொள்கையாகும். இவ்விதமாக வாழ்ந்துவந்தமையாற்றுன், சிங்களர்முதலிய மற்றைய வகுப்பினரும் இவரைத் தம் தலைவராகக் கருதி அதி உன்னத பதவியை இவர் அடைய உதவியாயினர். பளிங்குபோன்ற சிந்தையும், களங்கமற்ற வாழ்க்கையும், தயாளகுணமும், இன்மொழியும், எதைத்தான் அடையச்செய்யா? யாழ்ப்பாண வாலிபர்க்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கும் இப் பெரியாரின் உதவியால், நம் நாடு நன்மை அடையுமென்பதற்கு ஐயமில்லை. பேசும்போதெல்லாம் வகுப்புவாதத்தைக் கிளப்பிச் செய்யப்புகுந்த விஷயங்கட்கும் நட்டத்தை விளைத்து, தமது சாகியத்தவர்க்கு இடையூறு செய்யும் புதுத் தலைவர்கள், இவரை ஓர் முன்மாதிரியாகக் கொண்டிருப்பின், எவ்வளவோ நன்மைகளை நமது நாட்டிற்குக் கூட்டிவைக்கலாம்,

நமது தலைவரவர்கள் அடுத்த மாத முதற்பகுதியில் அரசர் பெருமானின் முடிசூட்டுவிழாவில் சமுகமளிப்பான் பொருட்டு, இங்கிலாந்துக்குச் செலகின்றனர். இவர் யாத்திரை நற்சித்தியடைய திருவருள் கைகூடுவதாக. இலங்கையின் முதற் பெரியாராக அரசினராலும் பொதுமக்களாலும்போற்றிப் பொருட்படுத்தப்படுமிவர்க்கு, அரசினர் மென்மேலும் பட்டங்கள் வழங்கிக் கௌரவப்படுத்துவாரென்பதும், எமது நம்பிக்கையான அபிப்பிராயமாகும். இவருடன் இலங்கையின் பிரதிநிதியாக அரசாங்கசபையின் பிரதம மந்திரியாராகும் சேர். D. B. ஜெயத்திலக்கா அவர்களும் கூடிச் செல்வாரென அறிகின்றேம். ஆகையால், இலங்கையின் பிரதம இருவகுப்பினரினதும் தனிப்பெருந் தலைவராகும்இவர்கள்,தேசமுன்னேற்றத்தை முன்னணியில் வைத்து நோக்கி, இப்போது சிறிது பிரிந்திருக்கும் இருவகுப்பினரையும் ஒருங்குசேர்த்து ஒற்றுமையை நாட்டிவைக்க வகைதேடின், அதுவே இவர்கள் நாட்டிற்குச் செய்த பெருந் தொண்டாகும். நாடு பிரிந்திருக்க நாம் நன்மையடைவோமென எண்ணின், அது வீண்கனவேயாகும்.

காலத்துக்குக் காலம் தமது கொள்கைகளைச் சுயநல நிமித்தமாக மாற்றுஞ்சிலர்போன்றவரல்லர் நமது அரசாங்கசபைத்தலைவர், நடுநிலையை என்றுங் கைவிடார். இக்குணங்களையே பெரிதும் ஓம்பி நிற்கும் நமது பத்திரிகைச் சிறுவனும், தம்போன்ற ஒருவரை உபசரித்தாகை, அவன்பெருமையும் மதிப்பும் பன்மடங்கு பெருகுமென்பதே எமது அபிப்பிராயம். பத்திரிகையினுல் அடையும் பலன்கள் சிலவன்று. மேலும், அப்பத்திரிகை உயரிய நோக்குடன், வகுப்புவாதத்தில் பெரிதும் ஈடுபடாது, நாட்டின் பொதுநன்மையை நாடிநிற்பது, அத்தியாவசியகம். நம் பத்திரச் சிறுவனும் இவ்வாறு உயரியவழியில் விருத்தியடையவேண்டுமென, நேற்று அநேகர் தமது சொற்பொழிவில் எடுத்துக் காட்டியுள்ளார். அவ்வாருகப் பரம்பொருள் கைகூடுவதாக. நமது அரசாங்கசபைத் தலைவரும் சிறப்புற்ருேங்கத் திருவருளின் கடாக்ஷம் வேண்டப்படுவதாக.

### நன்றியுரை

எமது நிலையத்தில் அரசாங்க சபைத் தலைவர் கௌரவ ஸ்ரீமாந். வை. துரைசுவாமி அவர்களுக்கு நடாத்தப்பட்ட உபசரணையின் பொருட்டு, வாழ்த்துப்பர்க்களும், மற்றும் அன்பு மொழிகளும் விடுத்த யாவர்க்கும் நன்றி கூறுகின்றேம்.

இடமின்மையால் நிகழ்ச்சிக் குறிப்புகள் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளன. மற்றையவை பின்னர் வெளியிடப்படும்.

### அப்படியாயின்

அடுத்தவாரம் தேசிய மாகசபையின் ஆதரவில் புதிய அரசியற்றிட்டத்தைக் குறித்து ஆலோசிப்பதற்கு டெல்லி நகரில் ஒரு மகாசபை கூட்டப்பட விருக்கின்றது. அப்போது மகாத்மா காந்தியடிகளும் சமுகமளிப்பார்கள்.

புதிய அரசியற்றிட்டத்தைக் காங்கிரஸ்கட்சியினர் ஏற்று நடத்துவதாயின், தேசாதிபதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும்விசேஷ அதிகாரங்கள் உபயோகிக்கப்படாதிருப்பதாக உறுதி மொழி வழங்க வேண்டுமெனக் காந்தியடிகள் கூறியதுண்டு. இவ்விஷயமாக டெல்லியில் மிகப்பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றதென அறிகிறேம்.

இந்தியசட்டசபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்க வந்துள்ள காங்கிரஸ் தலைவர்களாலும் ஆலோசிக்கப்படுகின்றஇவ்விஷயம்இனிது நிறைவேறவேண்டில், அரசினர்முன்வந்து ஏற்றதைச் செய்வதில் தாமதஞ்செய்யாதிருப்பதும் அவசியம். இராஜப்பிரதிநிதியவர்கள் ஒருபோதுகாந்தியடிகளை இவ்விஷயமாகச்சந்தித்துப் பேசவுங்கூடுமென ச்சிலர்பேசிக்கொள்கின்றனர். அப்படியாயின் அரசினர்க்கும் காங்கிரஸ் கட்சியினர்க்கும் மிடையில் ஏற்பட்ட பிணக்கு, ஓரளவுக்காயினும் நிவிர்த்தியடைய வசதியுண்டு. முன் அரசியலை நடத்திய இர்வின் பிரபுபோல் தற்போதைய இராஜப் பிரதிநிதியும் இந்தியரின் முன்னேற்றத்தில் அக்கறையுடையராயின் இவ்விருபாலார்க்குமிடையில் சிறிதாவது நட்பேற்படலாமே. ஆகையால் எல்லாம் நல்வழிச்சேறின் புதிய அரசியற்றிட்டம் உயரிய வழியில் நடத்தப்படக்கூடியதாகும். அரசினர்க்கும் காங்கிரஸ் கட்சியினர்க்குமிடையில் சட்டசபைகளில் நிச்சயமாக ஏற்படுமென யாவரும் கருதும் பிணக்குகளும் நீங்கும். இந்தியமக்களும் அவசியமின்றி அல்லல்களையும் அடையாதிருப்பர். வீண் குரோதங்களும் வாதங்களும் தோன்ற நாட்டில் பல்வேறு சங்கடங்கள் உண்டாக்கா திருக்குமா?

### திரு. நா. சேனதிராஜா அவர்கள்

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிலுள்ள அரசினர் கமத்தின் அதிபாரகப் பதினைந்துவருடம் கடமை நடாத்திப் பின் பல்வேறு இடங்களிலும் கிருஷிக உத்தியோகத்தராய் வேலைபார்த்து, ஈற்றில் பரந்தனிலுள்ள அரசினர் கமத்தின் அதிபாரகக் கடமை ஆற்றிவந்தவரும் சுன்னுக வாசியுமாகிய ஸ்ரீமான் திரு. நா. சேனதிராஜா அவர்கள், தமது இல்லத்தில் நேற்று (6-3-37) உயிர்துறந்தனரெனக் கேட்டு மிகத்துயரடைந்தோம். அரசாங்க உத்தியோகத்தராக இருந்தாராயினும். இவர் கமச்செய்கையின் விருத்தியை நாடிச்செய்த தொண்டுகள் ஒரு மாத்திரமன்று. இவரையறியாதார் இல்லையென்றே கூறலாம். இவரின் பரோபகார சிந்தையும், இனிய மொழிகளும், யாவர்க்கும் ஒப்பநடக்கும் உயரிய குணமும் பொதுவாக யாவராலும் போற்றற்பாலன. கமத்தொழிற் பகுதியினரும் இவரின் ஆற்றலை மெச்சிவந்ததும் உண்மை. மலாய்நாட்டில் ஜொஹூர் சமஸ்தானத்தில் உயர்ந்த வைத்தியராகக் கடமையாற்றும் (இப்போது விடுதலையில் சுன்னுகத்தில் வசிக்கின்றனர்.) Dr. N S நாதர் அவர்களும், கொளும்பு நகரில் பிரபல நியாயதுரந்தராராக விளங்கும் திரு. N. குமாரசிங்கமவர்களும் இவரின் சகோதரர்கள். மூன்று சகோதரிகளும் உளர். இறக்கும்போது இவர்க்குவயது நாற்பதாகும். இவர்பிரிவால் துயருறும் இவர் குடும்பத்தினர்க்கும் சுற்றத்தார்க்கும் மற்றையோர்க்கும் எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றம்.

### யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு

10-வது வழக்கு

#### 1- எதிரிக்கு 12 வருடக் கடூழியச்சிறை

யாழ்ப்பாணம் மார்ச் 4.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் சென்ற சித்திரை மாதம் 26-ந் திகதி சுண்டிக்குளியைச்சேர்ந்த ஸ்ரீமதி A. E. ஹென்ஸ்மனிடம் வேலைக்காரியாகவிருந்த 12 வயதுச் சிறுமி தங்கம்மாவை (1) M. முத்தையா அல்லது ஆழ்வான என்பவன் கடத்திக்கொண்டு போனதாகவும், (2) ஸ்ரீமதி ஹென்ஸ்மன் வீட்டுச் சமையற்காரி செல்லமுத்து அதற்கு உடந்தையாக விருந்ததாகவும் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

தங்கம்மா, ஹென்ஸ்மன் முதலியோர் சாட்சியங் கூறிய பின் ஜூரர்கள் எதிரி, பெண் கடத்தியதற்குக்குற்றவாளியாகிறன் என அபிப்பிராயப்பட்டார்கள். நீதியரசர் 2-ம் எதிரியை விடுதலைசெய்து 1-ம் எதிரிக்கு 3 வருஷக் கடூழியச் சிறைத்தண்டனையளித்தார்.

11-வது வழக்கு

#### எதிரிக்கு 7 வருடச்சிறை

யாழ்ப்பாணம் மார்ச் 5வ

சென்ற ஆடிமாதம் 17-ந் திகதி திருநெல்வேலி கிழக்கு வாசியாகிய நாகலிங்கம்-தம்பு என்பவருக்கு அவ்வூர் கக்கையா-ஆறுமுகம் என்பவர் கத்தியாற் குத்தி மரணம் விளைவிக்க எத்தனித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டது.

எதிரி சார்பில் நியாயதுரந்தரார் K. V. சின்த்துரை அவர்களின் அனுசரணையின் மீது நியாயவாதி S. துரைசாமி-தம்பு அவர்கள்விவாதித்தார்.

வைத்திலிங்கம்-சதாசிவம், செல்லையா ஆதியோர் சாட்சியம் கூறியபின் "ஜூரிமார்களில் ஐவர் நீ கொலைக் குற்றமல்லாத கைபிழைபாட்டுக் குற்றஞ் செய்ததெனக் கூறியமைபால் நான் உனக்கு 7 வருஷக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கிறேனென" நீதிபதி தீர்ப்புச் செய்தார்.

### விட்டுவிலகிவிட்டனர்.

சொழும்பில் வசிக்கும் பிரபல நியாயதுரந்தராகும் திரு M. நடராஜா அவர்கள் சில மாதங்கட்கு முன் பிரதம முடிப்புறத்து நியாயதுரந்தரராக நியமிக்கப்பட்டனர். இப்போது இவர் அப்பதவியினின்று விலகிவிட்டனரென்று புதினங்கள் கூறுகின்றன. காரணம் கூறப்படவில்லை. நியாதுரந்தரராக விருப்பின் பெரும் பொருளை ஈட்டக்கூடுமென எண்ணினரோ தெரியவில்லை. இவர் போன்ற அதி தீவிர விவேகமும் அறிவும் வாய்ந்தோர் அரசினர்கீழிருப்பதிலும் நியாயதுரந்தரராக வாழ்ந்து பொதுநல விஷயங்களில் உழைப்பின் அதனுல் எய்தக்கூடியபெருமைகளும் நன்மைகளும்பல.

### "டெயிலி நியூஸ்" பத்திரிகை பேரில் கோட்டு நிந்தாட்சணை.

இற்றைக்குச் சில மாதங்கட்கு முன் கொழும்பில் நடைபெறும் "டெயிலி நியூஸ்" பத்திரிகையின் ஆசிரியர்மீது நீதிமன்றத்தை நிந்தாட்சணை செய்ததாக ஓர் குற்றம் சாட்டப்பட்டதும், பின் அந்த வழக்கு முதன் நீதிபதி உட்பட மூன்று நீதிபதிகளால் விசாரிக்கப்பட்டதும், விளக்கத்தின்பின் மேற்படி பத்திரிகையின் ஆசிரியர்க்கு ஒரு நாள் நீதிமன்றத்தில் சிறைவாசமும், 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதும் யாவரும் அறிவர்.

பின் மேற்படி பத்திரிகையின் ஆசிரியர் இத்தீர்ப்பிற்கு மாறுக லண்டனிலுள்ள நீதிமன்றத்துக்கு மனுச்செய்ய உத்தரவு கேட்டனர். இப்போது லண்டனிலுள்ள உயர்தர நீதிமன்றத்தினர் இவ்வித வழக்குகட்கு மனுச்செய்ய உத்தரவு அளிக்கப்படாதென்று உத்தரவு செய்துவிட்டனர்.

ஆகவே இலங்கை உயர்தர நீதிமன்றத்தினர் செய்த தீர்ப்பு உறுதிப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்களுக்கு வரவேற்பு



[மாகாண வைத்திய அதிகாரியாயிருந்து இளைப்பாறிய டக்டர் S. சுப்பிரமணியம்]

யாழ்ப்பாணம் 6

இன்று மாலை 5.45 மணியளவில் ஈழகேசரிப் பத்திரிகாலய அலுவலாளர்களும் அபிமானிகளும் மற்றைய அன்பர்களுமாக அரசாங்கசபைத் தலைவர் கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்களையும், மாகாண வைத்திய அதிகாரியாகவிருந்து இளைப்பாறியிருக்கும் டாக்டர் S சுப்பிரமணிய அவர்களையும், சுன்னாகத்தைச் சேர்ந்த பெரியமதவடியிலிருந்து ஊர்கோலமாக அழைத்துக்கொண்டு ஈழகேசரிக் காரியாலயத்துக்குச் சென்றார்கள். காரியாலயத்தை அணுகியதும், ஈழகேசரி அதிபர் திரு நா. பொன்னையா அவர்களும் திரு. கு அம்பலவாணர் அவர்களும் மாலையிட்டு, அன்புடன் உபசரித்து அமர்த்தினார்கள். அப்பால் இருவித புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

தலைவரவர்கள் வந்ததின்மேல் யாவருக்கும் சிற்றுண்டி தேனீர், சோடா முதலியன வழங்கப்பட்டன.

ஆறுமணியளவில் வைத்திய அதிகாரி டாக்டர் S. சுப்பிரமணியம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் பன்னூற்றுக்கணக்கானோர்களின் மத்தியில் உபசரணைக் கூட்டம் ஆரம்பமாகியது. முதலாவதாக திரு. S செல்லத்துரை அவர்களால் தேவாரபாராயணம் செய்யப்பட்டது.

அதன்மேல் திரு. K. இராசநாயகம் அவர்கள் ஈழகேசரி அலுவலாளர்கள் சார்பாக அரசாங்கசபைத் தலைவர் கௌரவ ஸ்ரீமான் வை. துரைசுவாமி அவர்கட்கு ஓர் உபசரணைப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார். (உபசரணைப்பத்திரம் பிறிதோரிடத்திற் காண்க.)




[சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. சுவாமிநாதன் B. A.,]

பின்னர், இலங்கையின் நாநுபக்கங்களிலுமிருந்து, மந்திரிமார், அரசாங்கசபை அங்கத்தவர்கள், மற்றும் அனேக பெரியார்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன.

அதன்பின் அக்கிராசனரவர்கள் தமது பிரசங்கத்தை நிகழ்த்தினார், அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

**அன்புமிக்க சபையோர்களே!**

"நமது அரசாங்கசபைத் தலைவர் அவர்களைப் பற்றி அறியாதவர்கள் ஒருவருமிலர். அவரைப்பற்றி யாம் வியந்து கூறுவது முடியாத காரியமாகும். அவரை நான் அவரது பாலிய வயதிலிருந்தே அறிவேன் என்பதை உங்கட்குத் தெரிவிப்பது எனக்கு அளவுகடந்த சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. தற்கால மாணவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும்வண்ணம் நமது தலைவரவர்களின் பள்ளிப்பருவம் சாலச் சிறந்ததாகும். முன்னொருபோது நான் சென்னைமாநகரில் இருந்து கல்விபயின்ற காலத்தில் நமது தலைவரவர்களும் கல்கத்தாவிற்குப் போவதற்காக வந்த வழியில், என்னுடன் இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டுக் கல்கத்தாவிற்குச் சென்றார். அடுத்தவருடத்தில் நானும் கல்கத்தாவிற்குச் சென்றேன். அப்போது நாங்கள் இருவரும் ஒற்றுமையாக விருந்தோம். அக்காலங்களிலேயே நான் தலைவரவர்களின் குணநலங்களைப்பற்றி நன்கு அறிந்துகொண்டேன். அவ்வூரில் நான் மெடிக்கல் கல்லூரியிலும், தலைவரவர்கள் பிறசிடென்சிக் கல்லூரியிலும் வாசித்து வந்தாலும், எங்கள் ஒற்றுமை மிகவும் பலமாக விருந்தது. அக்காலத்திலேயே அவர் அவ்வூரிலேயே—அதாவது கல்கத்தாவிலேயே பலவந்தமின்றிச் சேர்க்கப்படும் படையில் (Volunteer Corps) தங்களைச் சேர்க்கும்வண்ணம் கேட்டபோது அரசினர் மறுத்தாராயினும் பின் அவர்களுடன் வாதாடி அதில் இடம்பெற்றனர். இவ்வாறு உரிமைகளைப் பெறுவதற்காக வாதாடும் வழக்கம் இவர் கல்விகற்கும் காலத்திலேயே ஆரம்பித்துளது."



[அரசாங்கசபைத் தலைவர்]

அதன்பின், நியாயதுரந்தரர் திரு. T. C. இராசரத்தினமவர்கள் பத்திரிகையைப் பற்றியும், அதன நோக்கங்களைப்பற்றியும், தலைவரவர்களைப்பற்றியும் அவரது நோக்கங்களைப்பற்றியும் மிகவும் விரிவாக ஓர் சொற்பொழிவாற்றியதன்மேல், திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. S. சுவாமிநாதன் அவர்கள் பத்திரிகையின் பெயரே தலைவரவர்களின் பெயரெனவும், தலைவரவர்களின் பெயரே பத்திரிகையின் பெயரெனவும் விளக்கப்படுத்திச் சிறந்த உபந்நியாசம் செய்தனர்.

பின், சைவ வித்தியாவிருத்திச் சங்க மனேஜர் திரு. S. இராசரத்தினமவர்கள் தமது சிநேகனாகிய தலைவரை வியந்து பேசினார்.

கௌரவ தலைவரவர்கள் பதிலளிக்கையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"யாழ்ப்பாணமாகிய எனது தாயகமே சகல விஷயங்கட்கும் மேன்மைபொருந்திய தேசமென நான் எண்ணுகின்றேன். நாமெல்லோரும் ஒற்றுமையாக இருப்பின் எங்கள் எண்ணங்கள் யாவும் கைகூடுவதற்கு ஒருவிதமான தடையுமிராது. இந்த நேரத்தில் எனது பழையநண்பர்களையும் புதிய நண்பர்களையும் கண்டுகொள்ள வசதியைஉண்டாக்கியதற்காக நான் 'ஈழகேசரி'ப் பத்திரிகாலயத்தவர்க்கு நன்றி கூறுகின்றேன். மாலை வேளை, அதிலும் உயரிய நண்பர்கள் நிறைந்த மேடை—அத்துடன் நான் உங்களுடன் அளவளாவுவதை நினைக்க எனக்கே பெரிய உவகையாக விருக்கிறது. உங்களுங்களது பிள்ளைகள் மூடராகவிருந்தால் என்ன சொல்லுவீர்கள்? மிகவுங் கெட்டிக்காரப் பிள்ளையென்றே சொல்லுவீர்கள். மிகவுங் கெட்ட பிள்ளைகளாக விருந்தால் மெத்த நல்லபிள்ளையென்றே கூறுவீர்கள். அதனால் அப்பிள்ளைகளும் திருந்தி நல்லவர்களாகுவதுடன் உயரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற் குரியவராகிறார்கள். அதேபோன்று நீங்களும் உங்கள் பிள்ளையென நினைந்து எனது குற்றத்தைக் களைந்து குணங்களைக் கைக்கொண்டு புகழ்வது என்னை மேல்நிலை அடையப்பண்ணுவதற்கு ஓர் சிறந்த வழியாகும்.

தமிழ்ப பத்திரிகை வாயிலாகத் தமிழ்ப் பாஷையை வளர செய்வது மிகவும் விசேடமாகும். சமயாபிமானம் போன்று நாம்பாஷையிலும் அபிமானங் கொள்ளுதல்வேண்டும். நான் பத்திரிகாலயத்தார்க்கும், இங்குளனது வருகைக்கெனவந்திருப்பவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

ஈற்றில் ஈழகேசரி அதிபர் திரு நா. பொன்னையா அவர்கள், தலைவரவர்களுக்கும், குழுமியிருந்த கனவான்களுக்கும் தமது சார்பாகவும், பத்திரிகையாளர் சார்பாகவும் நன்றி கூறினார்- இத்துடன் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.



[மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரசங்கத் தலைவரும், பிரபல நியாயதுரந்தரருமாகிய திரு. T. C. இராசரத்தினம்]



[சைவ வித்தியா விருத்திச் சங்க வித்தியாசாலைகளின் அதிபர் திரு. சு. இராசரத்தினம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிறீங்கோட்டு விசாரணை-9.

## கொட்டடியில் கொலைசெய்ய எத்தனித்த வழக்கு

### புருஷன் மனைவி பிணக்கால் ஏற்பட்ட சண்டை

### எதிரிக்கு 7 வருடச் சிறை

யாழ்ப்பாணம் மார்ச் 3.

இன்று சுப்பிறீங்கோட்டில் நீதியரசர் சேர் சிட்னி சொலமன்ஸ் ஏபிரகாம்ஸ் அவர்களதும், திரு. M. அம்பலவாணர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட யூரிக்கனவான்களதும் முன்னிலையில் சென்ற ஆடி மாதம் 29-ந் திகதி கொட்டடிவாசியாகிய நாராணி—நாகமணி என்பவனை அவ்வூர் மாணிக்கம்—வேலுப்பிள்ளை என்பவன் குத்திக் கொலைசெய்ய எத்தனித்ததாகத் தொடர்ந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

எதிரிசார்பில் விவாதிக்க யாரும் ஏற்படுத்தப்படவில்லை.

இவ்வழக்கில் எதிரியாகும் மாணிக்கம்—வேலுப்பிள்ளை என்பவன் தனது சொந்தக்காரனாகிய நாராணி—நாகமணியின் வீட்டுக்குப் பக்கத்தில் வசித்துவந்தான். சென்ற ஆடி மாதம் 20-ந் திகதி ஆறு மணியளவில் நாகமணியும் மனைவியும் சமையல் செய்து வைக்காததையிட்டுச் சண்டைபிடித்தனர். எதிரியாகிய மாணிக்கம்—வேலுப்பிள்ளை அவ்வளவிலேயே காற்றுடி பறக்கவிட்டுக்கொண்டு நின்றான். இச்சத்தத்தைக்கேட்டு அவனதிடத்துக்கு ஓடிவந்தான். ஓடிவந்ததும், நாகமணியைப்பார்த்து "நீ ஏன் உன்மனைவிக்கடிக்கிறாய்" என்று கேட்டான். அப்போது புருஷனும் மனைவியுமாக "நாங்கள் புருஷனும மனைவியும் சண்டை பிடித்தால் நீ என் இதற்குள் வருகிறாய்? போய்விடு" என்றார்கள். இப்படிப் பேசிவிட்டு எதிரி பக்கத்திற் கிடந்த ஓர் தென்னைமட்டையை எடுத்து அவனுடைய மனைவிக்கு அடித்தான். நாகமணி இந்நேரத்தில் மதுபானம் பாவித்திருந்தான். நாகமணி எதிரியைப் பார்த்து, "நான் அவளுக்கு அடித்துவிட்டேன்; நீயும் ஏன் அவளை அடிக்கிறாய்" என்று கேட்டான். எதிரியுங் கோபங்கொண்டு "நான் உன்னைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு சிறிது தூரம் ஓடித் திரும்பிவந்து நாகமணியின் தலைமயிரிற் பிடித்துக்கொணடு ஓர் கிறிசால் மூன்றுமுறை வெவ்வேறு இடங்களில் குத்தினான். காயக்காரன் அறிவற்று நிலத்தில் விழுந்துவிட்டான். பின்னர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நீதிபதிக்கு வாய் முறைப்பாடு கொடுத்தான்.

சாட்சிகளை விளங்கியபின் எதிரி கூறியதாவது :—

இச்சம்பவம் குடிவெறியின் நிமித்தம் நடைபெற்றது. நாங்கள் இருவரும் தவறணையில் குடித்தோம். பின தவறணையிலிருந்து இரண்டுபோத்தல் கள்ளையும் வீட்டுக்குக் கொண்டுவந்து குடித்தோம். இந்த இரண்டு போத்தல் கள்ளுக்கும் நான்தான் காசு கொடுத்தேன். ஆகையால் இந்தக் காசில் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. காயக்காரன் என்னைத் தள்ளி விழுத்தி அடித்ததுமல்லாமல் தொண்டையையும் பிடித்து நெரித்தார். நான் பயத்தாற் கத்தியை எடுத்துக் குத்தினேன். குத்தியபின் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டேன்.

யூரிமாரில் ஆறுபேர் எதிரியைக் கைபிழைபாட்டுக் குற்றத்தின்பேரில் குற்றவாளியாகவும், மற்றொருவர் மாறாகவும் தீர்ப்புக் கூறினர்.

நீதியரசர் எதிரிக்கு எழுவருஷக் கடுங்காவல் மறியல் விதித்தார்.

நமது நிருபர்.

## வடஇலங்கைக் கீழைத்தேச சங்கீதசபை

### வேனிற் கால வகுப்பு

ஷை சபையாரால் நடாத்தப்பெறும் கீழைத்தேச சங்கீதப்பயிற்சி (வேனிற்கால) வகுப்பு வரும் ஏப்ரல் மாதம் 3-ந்தேதி தொடக்கம் ஒரு மாதம் வரைக்கும் சுண்டிக்குளி செயின்யோன்ஸ் கல்லூரியில் ஆரம்பிக்கப்படும்.

சம்பள விகிதம்:--

| | | |
|---|---|---|
| ஆசிரியர்களின் பகுதி | ரூபா | 25-00 |
| வையலின் அல்லது வீணை | ,, | 10-00 |
| சிறுவர் (14 வயதுக்குள்) | ,, | 5-00 |
| ஆசிரிய கலாசாலை மாணவர் | ,, | 4-00 |

நிர்வாக சபையின் அனுமதிப்படி கீழ்க்குறிப்பிடப்பட்டவர்கள் ஆசிரியர்களாய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

அதிபர் M. S. பரம், உதவி அதிபர் ஸ்ரீமதி மகேஸ்வரி தேவி நவரத்தினம், விரிவுரையாளர்கள் பிரமஸ்ரீ பரமேஸ்வரஐயர், இராமநாதபுரம் பிரமஸ்ரீ V. வெங்கடாசலம் ஐயர், சிதம்பரம் A. இராசுப்பிள்ளை, திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை திரு. S. செல்லத்துரை, V. இராசசிங்கம்

வகுப்பு காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நடாத்தப்படும்

மற்றும் விபரங்கள் ஷை சங்கத் தலைவரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

(ஒப்.) K. S. அருள்நந்தி
தலைவர். வ. இ. கீ. ச. ச.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10734

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

தெல்லிப்பழை மேற்கு,
(1) வல்லிபுரம்-ஆறுமுகசாமியும்
(2) பெண் கதிராசிப்பிள்ளையும்
வழக்காளிகள்

தெல்லிப்பழை கிழக்கு,
(1) அப்புக்குட்டி-பொன்னையாவும்
(2) பெண் வள்ளியம்மைப்பிள்ளையும்.
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1937-ம் வருஷம் ஏப்பிரல் (சித்திரை) மாதம் 2-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தோகை

ரூபா 858-80-ம் இதற்கு 1936-ம் ஆண்டு ஐப்பசி மாதம 26-ந் திகதி தொடக்கம் இறுக்குந் திகதிவரையும் முறைமையான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 110-63-ம்.

### காணியின் விபரம்

தெல்லிப்பழைகிழக்கிறை, "இயாமா" நிலப்பரப்பு 11ம் செய்பயிர் வான்பயிர்களும் வான்பயிர்ப்பங்கும், கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றிற் பங்கும், நாலுமுள அகலங்கொண்ட வாய்க்காலும் வழியும். எல்லை: கிழக்கு எதிரிகளுக்குரிய ஆதனம், வடக்கு நவரத்தினம் பெண் சின்னத்தங்கத்துக்கும், மறுபேருக்கு முரியவாதனமும், கந்தப்பிள்ளை சார்ததிகேசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், மேற்கு குறித்த சார்ததிகேசுவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனமும், பழையரோட்டும். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

பெ. முத்துத்தம்பி
கொம்மிஷனர்

சுதுமலை தெற்கு மானிப்பாய்
யாழ்ப்பாணம் 1-3-37.
(285) 7-3-37—1

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, 9293.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு

உடுவில், உவில்லியம் - யோன் - கைம் பெண் எமிலி-தங்கம்மா வழக்காளி

இத்தியன்காடு,
யேக்கப்-வைரவநாதர்- மார்க்கண்டு தனக்காகவும், தனது காலஞ் சென்ற மாக்கறற்-பாக்கியத்துடைய ஆஸ்திக்குப் பிரதிகாரியஸ்தனுகவும்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1937-ம்வரு ஏப்பிறல் (சித்திரை)மீ 3-ம்உ சனிக்கிழமை பிற்பகல் 3-மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தோகை

ரூபா 813-12-ம் இதில் ரூபா. 500-க்கு 30-1-36 தொடக்கம் வருஷம் ஒன்றுக்கு 100-க்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 162-ம் இதில் இறுக்கப்பட்ட ரூபா 140 கழிய.

### காணிகளின் விபரம்

எழாலையிறை "நாவிதசிகாடு" நிலப்பரப்பு 7-ம் குளி 15¾ம் பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும் மேற்கெல்லைக் கிணற்றுப்பங்கும், எல்லை: கிழக்கு செல்லப்பா பெண் மீனாட்சிக்கும் பங்காளருக்கும். சபாபதிபெண் செல்லமுத்துவுக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு கணபதியார் ஆறுமுகத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு இரத்தினசிங்கம் பெண் இராசம்மாவுக்கும் குட்டித்தம்பி பெண் பூரணத்துக்கும் உரிய ஆதனம், தெற்கு ரோட்டு இதடங்கலும்.

பெ. முத்துத்தம்பி
கொம்மிஷனர்

சுதுமலை தெற்கு, மானிப்பாய்,
யாழ்ப்பாணம். 3-3-37
(286) 7-3-37—1

## யாழ்ப்பாணப் புகைரதப் பிரயாணிகள்சங்க ஆண்டுவிழா

சென்ற பெப்ரவரி மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் சுன்னாகத்தில் மேற்படி சங்க வருடாந்த விழா நடைபெற்றது. காரியதரிசியினதும், தனாதிகாரியினதும் அறிக்கைகள் வாசிக்கப்பட்ட பின்னர் கீழ்க் காணும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் திரு. S. நடேசன்; தலைவர்: நியாயதுரந்தரர் திரு. T. குமாரசுவாமி; உபதலைவர்: திரு. A. சுந்தரஐயங்கார்; காரியதரிசி: திரு. யோன் கிறிஸ்தோதாஸ்; தனாதிகாரி திரு: K. முத்துக்குமாரசுவாமி; நிர்வாகசபை அங்கத்தவர்கள்:- திருவாளர்கள் V. முத்துக்குமாரு, C. உருத்திராபதி, A. தெட்சணாமூர்த்தி, K. ஆறுமுகம், N. சுப்பையா இராசா, N. பொன்னையா, P. V. சிதம்பரசாஸ்திரிகள்.

## யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ண விழா

சென்ற 3-ந்திகதி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்திற் கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில், யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ச நூற்றாண்டு விழாவை மார்ச் மாதம் 12-ம் 13-ம் தேதிகளிற் கொண்டாடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய நிர்வாக முறைகளைச் செய்வதற்கு ஓர் நிர்வாகசபை நியமிக்கப்பட்டது.

## வலி. மேற்கு - தீவுப் பகுதித் தமிழாசிரியரின் கணிதபாடக் கழகம்.

1937-ம் ஆண்டு பங்குனிமாதம் 20-ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி கழகம் நடைபெறுமென்று கழகக் காரியதரிசி அறிவிக்கின்றார்.

## விற்பனவு விளம்பரம்

D. C. Jaffna
Testy. No. 2

அளவெட்டி செல்லப்பா அப்புத்துரை பெண் தையல்நாயகி
Deceased

செல்லப்பா அப்புத்துரை அளவெட்டி தற்போது மோறைகலை
தத்துவகாரர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் Testy. No. 2-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி 1937-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் பின்னால் காட்டப்படும் நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

1. தாலியும் கொடியும்
2. சங்கிலி
3. பதக்கம்
4. அட்டியல்
5. 3 சோடி காப்பு
6. 1 புறேச் (Brooch)
7. கவுத்தோர்
8. 3 மோதிரங்கள்
9. மூக்குத் துச்சி
10. வயிரக் கற்கள் பதித்த ஓலை

C. Kandiah Chettiar,
Commissioner of sales, D. C. J.

அளவெட்டி 1-3-37
(284) 7-3-37.

## பண்டாரவளை அர்ச். சூசையப்பர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த விழாவும், பெற்றார் தினக் கொண்டாட்டமும், பரிசளிப்பும்.

நிகழும் மாசித் திங்கள் 17-ந் திகதி (28-2-37)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் மேற்படி பாடசாலை விளையாட்டு நிலத்தில் போட்டி விளையாட்டுக்கள் நடைபெற்றன. பிற்பகல் 2 மணி தொடக்கம் பாடசாலைப் பொருட்காட்சியும் பின் 3-30 மணியளவில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் மேற்படி கொண்டாட்டம் வண. A. சிறீவர்த்தன பிதா அவர்களின் தலைமையின்கீழ் ஆரம்பமாயது. பாடசாலையின் சரிதையைக் குறிக்கும் பாட்டு எல்லா மாணவர்களாலும் பாடப்பட்டது. சபைத் தலைவருக்கும் ஊவாப் பகுதி வித்தியாதரிசி திரு. N. அருட்பிரகாசமவர்கட்கும், வண. A. M. B. ஜெயமான்ன குருப்பிரசாதி அவர்கட்கும் மலர் மாலைகள் சூட்டப்பட்டன. வந்தனப்பாட்டின்பின் பாடசாலையின் வருடாந்தக் குறிப்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. பின் பாடசாலை மாணவருக்குச் சபைத் தலைவரவர்களால் பரிசளிப்பும் இறுதியில் ஓர் இனிய சொற்பொழிவும் நடத்தப்பட்டன.

பின் கொண்டாட்டப் பிரகடனப் பத்திரத்திற் காட்டியுள்ள பிரகாரம் பாடசாலை மாணவர்களால் அலங்கிர்த விளையாட்டுக்கள் கோலாட்டங்கள் நடத்தப்பட்டு ஈற்றில் இராசவாழ்த்தோடு கொண்டாட்டம் 6 மணிக்கு முடிவெய்தியது.

—கடித.


### ஏஜண்டுகள் உடனே தேவை!

மாதச் சம்பளம் ரூபா 45.

எல்லா ஊர்களிலும் தாதுபுஷ்டிக்குச் சிறந்த M. S. ரதிவல்லபமோதகமும். M. S. குருதங்கரசம். M. S. குருசாந்தரசம் குருமருந்துகளும் வியாபாரம் செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை. ரொக்கம் அட்வான்சு ரூபா 50-00 கட்டவேண்டும். ரூபா 75-க்குப் பெறுமதியான மருந்துகளும், பெயர்ப்பலகை, நோட்டீஸ் முதலானதும் வியாபாரத்திற்குக் கொடுக்கப்படும். அருந்தருணம்! உடனே எழுதவும்.

விலாசம்:
மனேஜர், M. S. குருமருந்துச்சாலை
நம்பர் 17. டாலிரோட், மருதானை
கொழும்பு.

(260) 14-2-37—5.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை

ஏழாவது வழக்கு

# கைதடிக் கத்திக்குத்து

## முதலாம் எதிரிக்கு நாலுவருடச் சிறை

எட்டாவது வழக்கு

# நெடுந்தீவுக் கொலை

## எதிரிக்கு ஏழுவருடச் சிறை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் சென்ற ஆனி மாதம் 29-ந் திகதி கைதடி வாசிகளாகிய (1) செல்லப்பா-மாணர், (2) செல்லப்பா—கோவிந்தர், (3) இரு எதிரிகளின் மாமனாகிய இளையதம்பி—சதாசிவம் என்பவர்கள் அவ்வூர் வேலுப்பிள்ளை - கார்த்திகேசு என்பவரைக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டது. எதிரிகளின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. V. கார்த்திகேசுவின் அனுசரணையின் பேரில் நியாயவாதி திரு. S. D. தம்பு விவாதித்தார்.

முதலாம் இரண்டாம் எதிரிகள் சகோதரர். மூன்றும் எதிரி முதல் இரு எதிரிகளின் மாமன். கைதடியிலுள்ள தேவலவத்தை யென்னுமிடத்தில் மாணருக்கும். தம்புவுக்கும் தோட்டங்களுண்டு, இவற்றைவிடச் சிறிது தூரத்தில் வேறு தோட்டங்களுமுண்டு. செல்லமுத்துவின் தோட்டங்களிலுள்ள ஓர் கிணற்றில் தம்பு-மாணர் இவர்களைவிட வேறு மூவருக்கும் தண்ணீர்ப்பங்குண்டு. புகையிலைக் கன்றுகளுக்கு ஒன்றைவிட்டொவ்வொரு நாளைக்கு இறைப்பதும் சாமி முதலிய தானியங்கட்கு ஐந்து நாட்களுக் கொவ்வொருமுறை இறைப்பதுமாய் இவர்கள் வைத்திருந்தார்கள்.

சென்ற ஆனி மாதம் 29-ந் திகதி 6 மணியளவில் தம்புவும் சகோதரன் கார்த்திகேசுவும் தம்புவின் மகன் குமாரசுவாமியுமாகத் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைக்கச் சென்றபொழுது அக்கிணற்றில் மாணர் ஆறுமுகம் கோவிந்தர் ஆகியோர் இறைத்துக்கொண்டு நின்றனர். அவ்விடத்தில் சதாசிவம் என்பவர் நின்றார். உடனே தம்பு இன்றைக்கு என்னுடைய முறையாகையால் உங்களை இறைக்க விடமாட்டேனென் றசொல்ல, மாணர் மறுத்தார். ஆகவே தம்பு துலாவிற்கட்டப்பட்டிருந்த வாளியை அவிழ்க்கவும் வேறு வாளியைக் கட்டவும் முயற்சித்தபோது மாணர் தடுத்தார். இருவரும் ஒருவரை ஒருவர் தள்ளி மயிரிற் பிடிபட்டனர். இந்த நேரத்தில் 2-ம் எதிரிவந்து மாணருக்கு உதவிபுரிந்தார். கார்த்திகேசு தம்புவுக்கு உதவிபுரிந்தார். கார்த்திகேசுவுக்கு மாணர் முதுகிலும் கையிலுமாக மூன்றுமுறை ஒரு வில்லுச்கத்தியாற் குத்தினர். தம்புவுக்கும் திரும்ப இரண்டுமுறை குத்திவிட்டு ஓடிவிட்டார். 3-ம் எதிரி தான் மாணருக்குக் குத்துகிறதற்கு ஒரு வில்லுக்கத்தியைக் கொண்டுவந்து "இந்தாடா குத்தடா" என்று சொல்லிக் கொடுத்தவராம். காயக்காரர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

எதிரிபக்கத்தார் தாங்கள் இறைத்துக்கொண்டு நிற்கையில் தம்பு அவ்விடம் வந்து மாணருக்கு ஒரு சிலைக்கம்பால் அடித்ததாகவும், மாணரும் திருப்பிஅடித்ததாகவும், அப்போது கார்த்திகேசுவும் சென்று மாணரை மயிரிற் பிடித்து அடித்தபோது, மாணர் கார்த்திகேசுவின் மடிக்குளிருந்த வில்லுக்கத்தியை எடுத்துக் குத்தியதாகவுங் கூறினர். இரண்டாம் எதிரி ஒன்றுஞ் செய்யவில்லை என்றும், மூன்றும் எதிரி அவ்விடத்திலில்லை என்றும் கூறினர்.

சாட்சிகள் விளங்கப்பட்டபின் யூரிமார்கள் ஏகமனதாக முதலாம் எதிரியைக் கடுங்காயம் வருவித்ததற்குக் குற்றவாளியாயும் இரண்டாம் மூன்றும் எதிரிகளைக் குற்றவாளிகளல்லவென்றுங் கூறினர்.

நீதியரசர் முதலாம் எதிரியைப் பார்த்து "உன்மீதுயூரிமார் இரக்கங் காட்டித் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். இப்போது யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு சின்னக்காரியத்திற்கும் கத்தியை எடுத்துப் பாவித்து விடுகிறார்கள்" எனச் சொல்லி முதலாம் எதிரிக்கு நாலுவருடக் கடூழிய மறியல் விதித்து, மற்றைய இரு எதிரிகளையும் விடுதலை செய்தார்.

## எட்டாவது வழக்கு

யாழ்ப்பாணம் மார்ச் 2.

சென்ற ஆடி மாதம் 3-ந் திகதி நெடுந்தீவு வாசியாகிய இளையதம்பி—சோமசுந்தரம் என்பவனை, அவ்வூர் கைத்தான்—வெலிச்சோர் என்பவன் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிக்காக திரு. ஹோமர் வன்னியசிங்கத்தின் அனுசரணையில் திரு. குணம் ஸ்பென்சர் விவாதித்தனர்.

வழக்கின் சாராம்சம்:

இளையதம்பி—சோமசுந்தரத்தின் வளவில் எதிரி கள்ளிறக்கிக்கொண்டு வருகையில் ஒருநாள் பனையில் எவரோ கள்ளத்தனமாகக் கள்ளிறக்கிவிட்டிருப்பதைக்கண்ட சோமசுந்தரம் எதிரியை வினவியது காரணமாக அவன் கள்ளிறக்கப் போவதை விட்டுவிட்டான். இரண்டுநாட்கள் சென்றபின் சோமசுந்தரம் எதிரியின் வீட்டிற்குப்போய் பார்த்துக் காணாது திரும்பிப் போய்விடடுப் பின்பு அவன் வீட்டிற்குப் போனபோது அங்கே தாமோதரம்பிள்ளை அவனிடம் கள் குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டு, தாமோதரம்பிள்ளைதான் எதிரியைக் கொண்டு தனது பாளையை வெட்டுவித்திருக்கவேண்டுமென்று எண்ணி அதனால் இருவரும் அடிபட்டபோது, தாமோதரம்பிள்ளையின் சொற்படி எதிரி சோமசுந்தரத்தைப் பாளை சீவும் கத்தியால் வயிற்றிற் குத்திவிட்டு ஓடிவிட்டான்.

டக்றர் தியாகராசா அவர்களின் சாட்சியத்தின்பின் காயமடைந்த இளையதம்பி—சோமசுந்தரம் சாட்சியங் கூறுகையில் தாமும் தாமோதரம்பிள்ளையும் வேளாளர்கள் என்றும் தங்களூரில் வேளாளர்களும் மாமேறுவது வழக்கமென்றும் குறிப்பிட்டான்.

கத்தியைத் தீட்டிக்கொண்டிருக்கையில் காயமடைந்தவன் போய் எதிரியிடம் பாளை வெட்டிபதைப்பற்றி விசாரித்தபோது வாக்குவாதமுண்டாயிற்றென்றும், காயமடைந்த சோமசுந்தரம் மயிரிற் பிடித்து எதிரியை அடித்தானென்றும், பிடியிலிருந்து விலகுவதற்காக எதிரி கத்தியுடன் கையைப் பின்னுக்கு எடுத்தபோது கத்தி சோமசுந்தரத்தின் வயிற்றில் குத்தியிருக்கவேண்டுமென்றும் எதிரி தெரிவித்தான்.

முடிவில் யூரிமார்கள் கைபிழைபாடாகக் கொலைசெய்ய முயன்றதற்கு எதிரி குற்றவாளியாகிறான் எனக் கூறியதின்மேல் நீதியரசர் எதிரிக்கு ஏழுவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

# கலம்பகம்

ஜெர்மனியில்! கலியாணமாகாத ஆண் பெண்களுக்கு வரிவிதித்து அதன்மூலம் வரும்பணத்தை விவாகமானவர்களுக்கு வழங்கப்படுகின்றதாம். நாலு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளையுடைய குடும்பங்களுக்கு ஒரு கோடி பொன் வரையில் விசேட உபகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

o o

மன்னர்பிரானின் முடிசூட்டுவைபவத்திற் கென லண்டன் நகரிலுள்ள அரசாங்க நாணயம் வார்க்கும் நிலையத்திற் புதிதாக நாணயங்கள் வார்க்கப்படுகின்றனவாம். ஒருபக்கத்தின் ஒருபுறத்தில் மன்னரின் உருவமும் மறுபுறத்தில் அரசியாரின் உருவமும், மறுபக்கத்தில் அரச தம்பதிகளின் சேர்ந்த உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

o o o

புறக்கோட்டை வாசியான வி. சோமசுந்தரம் என்னும் ஓர் சுருட்டுக்கடைக்காரர் கிறிஸ்மஸ் தினத்தன்று லைசென் இல்லாது கோட்டை புகைரதநிலையத்தில் ஒருஇறாத்தல் கஞ்சா வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் 500ரூபா அபராதமும் தவறினல் 3 மாதக்கடுங்காவற் தண்டனையும் விதிக்கப்பட்டது.

o o o

பிரிட்டனுக்கு சென்றமாதம் 75 லட்சம்றாத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதாம். சென்றவருடம் அதேமாதத்திலே 10750000 றாத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதாம்.

o o o

அட்டலாவளையைச் சேர்ந்த ஆர் எம், களு பண்டா டபிள்யு. எம்பீற்றர், டபிள்யு. எம். சார்ன்ஸ் என்போர்மீது வெளிமடையிலுள்ள உவாபென் ஹெட் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர்க்குப் பலத்தகாயம் வருவித்ததாகத் தொடரப்பட்டவழக்கில் முதலாம்எதிரிக்கு ஒருவருடக் கடுங்காவல்தண்டனையும், ஒருவருடத்துக்குப் பொலிஸ்மேற்பார்வையும் 3—ம் எதிரிக்கு 30ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

o o o

ஹாகூனிலுள்ள ஓர்சைக்கின் கிளப்பால் பொக்கிஷகாரனாக இருந்த ஓர் வாலிபன் ஏதோதனது அவசிய செலவினிமித்தம் கிளப்புக்குச் சொந்தமான 200 பவுணைக் கைப்பற்றிச்" செலவு செய்துவிட்டு அந்தக் கிளப்புக்குரியவர்களுக்குத் தெரிந்தால் பெருந்துன்பம் நேருமென்றெண்ணி மறுநாட்காலை அவ்வூர் நீதிபதியின் வீட்டிற்குச் சென்று அவரைஎழுப்பி நடந்தவற்றைச் சொல்லிவிட்டு அவர்கள்கையில் சிக்கினல் தனக்குத்துன்பம் நேருமாதலால் நீங்களே அதினின்றும் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று, அதற்குப்பதிலாகச் சிறைத் தண்டனையடையச் சம்மதமென்றும்கூறினனும். அதன்படியே அவனுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாம்.

o o

வதுளையைச் சேர்ந்த கும்பலவெலாவிலுள்ள சிலோஹாம் என்பவர் காய்மீது சுடுநீர் ஊற்றியதற்காக 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

o o o

டிங்கிரி எட்னு என்னும் ஒருவர் தனதுமகளை, அவளின் நடத்தையைப்பற்றி ஏற்பட்ட விவாதம் காரணமாக அவளின் தலையில் கல்லால்தாக்கி கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் சென்ற 1ந் தேதி கண்டிச் சுப்பிறீங்கோட்டில் 7 வருடக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டார்.

o o o

கும்பனித் தெரு பிறிஜ் வீதியில் உத்தரவின்றிப் பல்வைத்தியம் செய்துவந்ததாக செயின்டா என்னும் ஓர் சீனன் மீது தொடரப்பட்ட வழக்கில் அவன் 50 ரூபா பிணையில் விடப்பட்டிருக்கிறானும்.

o o o

நீர்கொழும்பு நகரசபையார் வீணை அலைந்துதிரியும் நாய்களைக் கொலைசெய்வதற்காக ஒருபுதியவழியைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம் நாயை ஒருஅறைக்குள அடைத்துவைத்து அவ்வறைக்குள் கார்பன் மொனுக் ஷைலட்வாயுவை ஓர் மோட்டார்க்கும்மாய் உதவியால் உள்ளே செலுத்தினல் அதுமூச்சுத்திணறிமாண்டுவிடுமாம்.

o o o

சென்றமாசிமீ 25ந்தேதி மட்டுவில் தெற்கிலுள்ள செல்லத்துரை பெண் மாணிக்கம் என்பவர் சாவகச்சேரிச் சந்தையிலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் நுணுவில் கிழக்குவாசியாகிய வேலன் இளையவன் என்பவன் அப்பெண்ணின் கழுத்திலிருந்த 10 தங்கப்பவுண் பெறுமதியான நகையொன்றை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக சாவகச்சேரி பொலிஸ் கோட்டில் இன்ஸ்பெக்றர் கான்என்பவரால் ஓர்வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம். எதிரிவிளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறன்.

o o

மோட்டாரிரதங்கட்குப் பாவிக்கப்படும் "பெற்றோல்" எண்ணெய் கலன் ஒன்று ஒருரூபாயாக விற்பதற்கு ஏற்ற முயற்சிகள் இலங்கையில் செய்யப்படுகின்றன.

o o

பழையபன்னருக்கும் ஸ்ரீமதி சிம்சனுக்கும் ஏப்பிரல் மாதம் 25ம்தேதியன்று வீயன்னுவிலுள்ள புடாபெஸ்டில் விவாகம் நடைபெறுமெனக் கூறப்படுகிறது.

o o o

ஜெர்மனியில் உள்ளஓர் கம்பனி 24 லட்சம்பவுண் மூலதனத்துடன் செயற்கை றப்பர் செய்வதற்கேற்ற ஒழுங்குகள் செய்கின்றதாம்.

o o

தென்னங்கள்ளிலிருந்து ஒருவகையான குடிவகைகளை கொழும்பு சென்ற் பீற்றர் கல்லூரி ஆசிரியருள் ஒருவரான கத்தோலிக்க குரு. T. பாறிஸ் என்பவர் வடித்திருக்கிறாராம். இக்குடிவகை புளிப்பின்றிப் பலநாட்களுக்கு அப்படியே இருக்குமாம். பீருக்குப்பதிலாகப் பருகக்கூடியனவாம்.

o o o

பண்டத் தரிப்பு வாசியாகிய சின்னத்தம்பி செல்லையா என்பவன் சென்ற ஆனி மீ 29ந்தேதி பிசுக்கால் கட்டளை கொடுக்கும் M. விசுவலிங்கமென்பவரைத் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகத் தொடரப் பட்டவழக்கில் 100 ரூபா அபராதம் தவறினல் 3 மாசமறியல் விதிக்கப்பட்டான்.

## விளம்பரம்

இத்தால் சகலருமறியும்படி அனலைதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது மலாய்நாட்டில் சிகாமற்றை வாசஸ்தானமாகவுங்கொண்ட சுப்பிரமணியர் வேலுப்பிள்ளை ஆகிய நான் வெளிப்படுத்துவதாவது:- 1936-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் திகதி அ. சிவம் என்பவரால் ஏமாற்றப்பட்டு தம்பின் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஓர் தத்துவதகிற் கையெழுத்திட்டேன் என்றும், அனலைதீவிலுள்ள எனது ஆதனத்தை ஈடுவைப்பதற்குக் குறித்த தத்துவத்தில் நான் யாரையும் நியமிக்கவில்லை என்றும், குறித்த தத்துவத்தை நான் எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் இதனுற் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

சிகாமற், இங்ஙனம்
16-2-37 சு. வேலுப்பிள்ளை
(279) 7-3-37—4-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்ப் பிரிவின் இடப்பெயர்களும் அவற்றின் சத்தோற்பத்திகளும்

(முற்றொடர்)

116. கண்ணு புதுக்குளம்: கண்ணு+புது+குளம். கண்ணு மரங்களுள்ள புதிய குளம். இது வடக்கு மாந்தையிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

117. காடிக்குழி: காடி+குழி காடிகள் வாசஞ் செய்யுங் குழி. இது மறிச்சுக்கட்டிக்குக் கிட்டவுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

118. கரைவெட்டி: கரை+வெட்டி+வெண்பு. ஆற்றின் கரை வெட்டப்பட்ட இடத்திலுள்ள வெண் நிலம். இது இலுப்பைக்கடவைப்பற்றிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

119. காம்பைக் குளம்: காம்பை+குளம். காம்பை நிலம்=வெடிப்புள்ள நிலம். இத்தகைய நிலத்திலுள்ள குளம். இப்பெயரையுடைய இரண்டு சிற்றூர்கள், ஒன்று மேற்கு மூலைப்பற்றிலும், இன்னொன்று வடக்கு மாந்தையிலு மிருக்கின்றன.

120. கருங்காலி மோட்டை: கருங்காலி+மோட்டை. கருங்காலி மரங்களுள்ள குளம். இது வடக்கு மாந்தையிலுள்ள ஓர் கிராமத்தின் பெயர்.

121 கரையான் கன்னாட்டி: கரையான்+கல்+நாட்டி. (I)கல் நாட்டப்பட்ட கரையானுடைய ஊர். (II)கரையான் கன்னாட்டி, என்று அடைமொழி கொடுத்து வழங்கியது கன்னாட்டிகளிலிருந்து பேர்த்துக் காட்டுவதற்கே போலும்.

122. கரிசால்: கரி+சால். கரிய நெல்லு விதைக்கப்படுமிடம். கரிசால் என்பது ஓர் போர்த்துக்கீச பாஷைச் சொல்லென்பாருமுளர். இப்பெயரையுடைய கிராமம் பேசாலைக்கணித்தாயுள்ளது.

123. கறுக்காக் குளம்: கறுக்கா+குளம். கறுக்கா மரங்களுள்ள குளம். இது மாந்தை வடக்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

124. கறுக்காமுறிப்பு: கறுக்கா+முறிப்பு கறுக்கா மரத்தடியில் முறித்த குளம். இது நானாட்டான் மேற்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

125. கரும்புளியான்: கரும்+புளியான். கரிய புளியுள்ள ஊர். இது பணங்காமத்திலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

126. கருங்காலிக் குளம்: கருங்காலி+குளம். கருங்காலி மரங்களுள்ள குளம். இது நானாட்டான் கிழக்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

127. கருங்காலித் தாழ்வு: கருங்காலி+தாழ்வு. கருங்காலி மரங்களுள்ள தாழ்ந்த நிலம். இது முசலி வடக்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

168. கருங்கண்டல்: கரும்+கண்டல். கரிய குளம். இது மாந்தை வடக்கிலுள்ள ஓர் கிராமத்தின் பெயர்.

129 கறுப்பன்குடியிருப்பு: கறுப்பன்+குடி+இருப்பு. கறுப்பன் என்னும் பெயரையுடையவன் குடி இருந்த இடம். இது மன்னார்த் தீவிலுள்ள ஓர் கிராமத்தின் பெயர்.

130. கஸ்பார் கட்டைக்காடு: கஸ்பார்+கட்டை+காடு. கஸ்பார் என்பவனுக்குச் சேர்ந்த பதிந்த காடு. இது நானாட்டான் மேற்கிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

131. கற்கிடந்தகுளம்: கல்+கிடந்த+குளம். கல்லிருந்த குளம் இது மடுறோட்டென்று தற்போது சொல்லப்படும், புளியடி இறக்கத்திற்கு அணித்தாயுள்ள ஓர் கிராமத்தின் பெயர். இக்கிராமத்தில் ஏதோ சிலாசாசனம் பழைய காலத்திற் கண்டெடுக்கப்பட்டிருக்கலாம்.

132. காத்தான்குளம்: காத்தான்+குளம். (I)காத்தானென்னும் பெயரையுடையவனின் குளம். (II)காத்தவனுடைய குளம். இது மாந்தை வடக்கிலுள்ள ஓர் கிராமத்தின் பெயர்.

133. கடாப் பிடித்த குளம்; கடாப் பிடித்த குளம். கடா+பிடித்த+குளம். எருமைக்கடா பிடித்த குளம் இது பணங்காமத்திலுள்ள ஓர் சிற்றூரின் பெயர். இப்பகுதியில் கொம்புவைத்த குளம், கடாப் பிடித்த குளம், கொம்பறுத்த குளம் என்று மூன்று சிற்றூர்களிருக்கின்றன. மூன்றும் எருமைக்கடா பிடிக்கும் முறையை விளக்கிக் காட்டும் பெயர்களாகவே இருக்கின்றன. எருமைக்கடா பிடிப்போர், கடாக்கள் தண்ணீர் குடிக்குமிடங்களில் மான், மரைக் கொம்பு முதலியனவற்றில் பெலமான கயிற்றைக் கட்டி உருவு தடம் போட்டு வைப்பதுண்டு. கடா தண்ணீர் குடிக்கும் சமயத்தில் இவ்வுருவு தடத்தில் அகப்பட்டுக்கொண்டால் அதிற் கட்டப்பட்ட கொம்பு ஏதேன் மரம் முதலியனவற்றிற் களாமற் சிக்கிக்கொள்ளும் வரையும் அதைக்கடா இழுத்துச் செல்கின்றது. அப்படிப் பிடிக்கப்பட்ட இடத்திற் சில நாட்களுக்கு விடப்பட்டு பெலனற்றதின் பின் கடாவை அவ்விடத்தினின்றும் கொண்டுபோவது வழக்கம். அப்படிக் கொண்டு செல்லப்பட்ட கடாவிற்கு வேலை செய்யப் பழக்கமுன் கொம்பறுப்பதும் வழக்கம். சொல்லப்பட்ட மூன்று ஊர்ப்பெயர்களும் ஏதோ ஒரு காலத்திற் பிடிக்கப்பட்ட ஓர் கடாவிற்கு இம்மூன்று காரியங்களும் செய்யப்பட்டதின் காரணமாகவே வந்திருத்தல் வேண்டும். (தொடரும்)

## கள்ளக் கையொப்பமிட்டு ஏமாற்றிய எதிரிக்கு 5 வருடக் கடுங்காவல்

சென்ற 2ந் திகதி கொழும்பு சுப்பிறீம் கோட்டில், கள்ளக் கையொப்பமிட்ட இருகடிதங்கள் மூலம் 4000 ரூபாவுக்கு ஓர் செக் ஏமாற்றி வாங்கினதாக கோல்டன்ஸ்டன் ஜெயவர்த்தனு என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு விளங்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதின்பேரில் நீதிபதி 5 வருடக் கடுங்காவற்றண்டனை விதித்தார்.

## சீர் - திருத்தம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

புரையையும் கூறுதல் மரபாகும். ஆங்காங்கெல்லாம் கல்விக்கடைகள் அமைக்கப்பட்டன. விற்பனவுகாரரும் அளவில்லாதவராயினர். அறிவுக்குரிய பொருள்கள் அங்கே விற்கப்படுவதில்லை; ஒரு சில கடைகளிலே கஞ்சா அபினைப்போல இல்லமலில்லை. அந்தக் கடைகளுக்கும் அறிவுப் பொருட்களுக்கும் யாதும் தொடர்பில்லை. காசுக்கும் சலசலப்புக்கும் மேலே பிரசாரகர் கூறியுள்ள அவைகளுக்குமே அக்கடைகள் வாங்கி விற்கும் பூரண உரிமை (sole agents) யுடையனவாம். இன்னும் ஒன்றேயொன்று சொல்லுவாம். அறிவை வளர்க்கும் கல்விச்செல்வியின் சீரைத் திருத்தும்பொருட்டுப் போனவர்களும் இருப்பவர்களும் புரிந்த புரிகின்ற இன்னல்களோ அளப்பிலவாம். இனி வருவோரும் அவர்களுக்கு அண்ணன் தம்பி முறையானவர்களே யாகும். இனி, சமயவிஷயமாக ஏற்பட்ட சீர்திருத்தமும் இம்மட்டு அம்மட்டல்ல. அது அவிவேக பூரண குரு குதிரைமுட்டை வாங்கிய அளவில் வந்துவிட்டது. எமது "கேசரி" யும் "சமயமும் குருக்கள்மாரும்" என அடியெடுத்துவிட்டது. இந்த விஷயமாக இனிமேல் ஆராய்வாம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 10692

தெல்லிப்பழை மேற்கு

தற்காலம் நாவலப்பிட்டி சின்னத்தம்பி ஆறுமுகம். வழக்காளி

தெல்லிப்பழை கிழக்கு

1. அப்புக்குட்டி பொன்னம்மாவும்
2. பெண் வள்ளியம்மைப்பிள்ளையும். எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 10692-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1937 ஸு சித்திரை மீ 2உ வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்.

தெல்லிப்பழை கிழக்கிலிற இயாமாபரதி. இல. 11. செய்பயிர் வான்பயிர்களும், வான்பயிர்களிற் பங்கும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும்கிணற்றில் ¼ பங்கும், 4முழ அகல வழிவாய்க்காலும். எல்லை: கிழக்கு 2-ம் எதிரியினுதனதனம், வடக்கு நவரத்தினம் பெண் சின்னத்தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு நவரத்தினத்தினுதனம், தெற்கு ஒழுங்கை. இதின் வடக்கெல்லை யருகால் மேற்கெல்லைக் காணிக்குரிய 4 முள அகல வழிவாய்க்கால் புறநீங்கலாக மிகுதி அடங்கலும்.

க. பொன்னப்பா
கொமிஷனர்

(202) 7-2-37



## Tamil & English Books Suitable as Text and Nondetail Books for use in Ceylon Schools.

| Name of the Book | Subject | Suitable for | Price in cents Rs. Cents |
|---|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம் முதற் புத்தகம் | தமிழ்ப் பாடம் | I Standard | 16 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் இரண்டாம் புத்தகம் | தமிழ்ப் பாடம் | II Standard | 20 |
| கிண்டர்கார்டன் தினசரிக் கணக்குப்புத்தகம் பாகம் 2 | கணக்கு | ,, | 22 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் மூன்றும் புத்தகம் | தமிழ்ப் பாடம் | III Standard | 25 |
| இயற்கை அற்புதங்கள் முதற் புத்தகம் | உப பாடம் | ,, | 20 |
| கிண்டர்கார்டன் தினசரிக் கணக்குப்புத்தகம் பாகம் 1 | கணக்கு | ,, | 38 |
| New Era English Readers, Primer, I | இங்கிலீஷ் பாடம் | ,, | 32 |
| Coronation English Readers, Primer, Part I | ,, | ,, | 20 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் நான்காம் புத்தகம் | தமிழ்ப் பாடம் | IV Standard | 30 |
| சிறு மணிக் கதைகள் | உப பாடம் | ,, | 32 |
| இயற்கை அற்புதங்கள் இரண்டாம் புத்தகம் | பொது அறிவு | ,, | 25 |
| கிண்டர்கார்டன் தினசரிக் கணக்குப் புத்தகம் II | கணக்கு | ,, | 50 |
| New Era English Readers, Primer II | இங்கிலீஷ் பாடம் | ,, | 38 |
| Coronation English Readers, Primer, Part II | ,, | ,, | 20 |
| New Era Story Book I. | இங்கிலீஷ் உப பாடம் | ,, | 20 |
| இந்து தேச சரித்திரக் கதைகள் பாகம் I | உப பாடம் | ,, | 30 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் ஐந்தாம் புத்தகம் | தமிழ்ப்பாட புத்தகம் | V Standard | 38 |
| கிண்டர்கார்டன் தினசரிக்கணக்குப்புத்தகம் பாகம் III | கணக்கு | ,, | 65 |
| கம்பர் அல்லது கவியரசர் | உப பாடம் | ,, | 32 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினவிடை | தமிழ் இலக்கணம் | ,, | 25 |
| இயற்கை அற்புதங்கள் மூன்றும் புத்தகம் | பொதுப் பாடம் | ,, | 32 |
| இந்துதேச சரித்திரக் கதைகள் பாகம் V | பொதுப்பாடம் | ,, | 38 |
| New Era English Readers, Book I | இங்கிலீஷ் பாடம் | ,, | 50 |
| Coronation English Readers, Book I | ,, | ,, | 38 |
| New Era Story Book II. | இங்கிலீஷ் உபபாடம் | ,, | 25 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் ஆறும் புத்தகம் | தமிழ்ப்பாட புத்தகம் | VI Standard | 44 |
| New Era English Readers, Book II | இங்கிலீஷ் பாடம் | ,, | 64 |
| Coronation English Readers, Book II | ,, | ,, | 50 |
| New Era Story Book III | இங்கிலீஷ் உபபாடம் | ,, | 38 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் ஏழாம் புத்தகம் | தமிழ்ப்பாட புத்தகம் | VII Standard | 50 |
| New Era English Readers, Book III | இங்கிலீஷ் பாடம் | ,, | 75 |
| Coronation English Readers Book III | ,, | ,, | 65 |
| கோபால் புதிய தமிழ் வாசகம் எட்டாம் புத்தகம் | தமிழ்ப்பாட புத்தகம் | VIII Standard | 58 |
| ஹென்றி போர்ட் | உப பாடம் | ,, | 50 |
| Coronation English Readers, Book IV | ,, | ,, | 75 |

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

B. G. பால் & கம்பெனி,
புத்தக வியாபாரிகள்
12, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை.

Sole Agents in Ceylon
S. S. ஷண்முகநாதன் & சன்ஸ்,
புத்தக வியாபாரிகள்
யாழ்ப்பாணம், இலங்கை.

21-2-37-3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமான் கு. கதிரவேற்பிள்ளை அவர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை! ஆட்பார்த்துழலும மருளில் கூற்றுண்மையான் பிள்ளையவர்களும் தமது நூல் அச்சூர்தியில் உலாப்போதற்கு முன் தாம் போய்விட்டார்கள்.

பிள்ளையவர்களின் அகராதியில் முதற் பகுதியைத் தவிர எஞ்சிய பாகம் கையெழுத்துப் பிரதியாகவிருந்தது. இவ்வகராதி முற்றினையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் பெற்று தமிழ் வளர்த்த வள்ளல் ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் உதவியால் வெளியிடத் தொடங்கிற்று. இதனை மூன்று பகுதியாக வெளியிடத் துணிந்து முதலிரண்டனையும் வெளியிட்டது. மூன்றும் பகுதி வெளிவருமுன் சங்கத்தில் கி. பி. 1920-ம் ஆண்டு நிகழ்ந்த தீவிபத்தில் பிள்ளையவர்களின் கைப்பிரதியில் ஒரு பகுதியை யிழக்க நேர்ந்தது. இதனால் அங்குள்ள பண்டிதரொருவர் இழந்த பகுதியை ஒருவாறு நிறைவேற்றினர். எனினும் பிள்ளையவர்கள் தொகுத்தவாறே முற்றும் வெளிவரா தொழிந்தது தமிழரின் அதிட்டக் குறைவென்றே கருதல் வேண்டும். கடந்த வாண்டு மார்கழித் திங்கள் விடுமுறை நாட்களில் ஸ்ரீமத் மகா மகோபாத்தியாயதாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களைக் காணும் பாக்கியத்தை அடியேன் பெற்றபொழுது சிறிதுநேரம்வரை ஸ்ரீமாந் கதிரவேற்பிள்ளையவர்கள் தமிழுலகுக்கு ஆற்றிய தொண்டைப்பற்றியும், அகராதியின் சிறப்பைப்பற்றியும் பாராட்டிக் கூறினர்கள். தியாகராஜ விலாசத்தில் டாக்டர் அவர்களின் ஆதரவால் தமிழ்த்தாய் புன்னகை புரிந்து இன்புற்று வீற்றிருத்தலை ஆண்டுச் செல்வோர் இன்றுங் கண்டு மகிழலாம். பழைய ஏடுகள் மேலே அடுக்கப்பட்டிருக்கவும், மாணவர்களுட் சிலர் ஏடுகளைப் பிரதி செய்து கொண்டிருக்கவும், சிலர் ஒப்பிட்டாராய்ந்துகொண்டிருக்கவும், சிலர் தமக்குத் தோற்றும் ஐயங்களை ஆசிரியர் அவர்களின் அடியிலிருந்தே கேட்டுத் தெளிந்து கொண்டிருக்கவும் இவர்கள் மத்தியில் ஆசிரியரவர்கள் தமிழுருவாய் வீற்றிருந்த இன்பக்காட்சி எம் மனத்தை விட்டென்று மகலாது. பெரிய புலவர்கள் சென்றாலும், அறிவிலிகள் சென்றாலும் அவரவர்கட்கேற்ற முறையில் உரையாடி மகிழ்விக்கும் ஆற்றல் ஆசிரியர் சாமிநாதையர் அவர்களிடம் அமைந்திருத்தலை யொப்பப் பிறிதொருவரிடமும் இல்லையென்றே கூறலாம். சில சிறந்த பண்டிதர்கள், தமிழின்மேலுள்ள பற்றினாலும் காணவேண்டுமென்னும் அவாவினாலும் உந்தப்பட்டுச் செல்லும் சிற்றறிவுடையாருடன் உரையாடல் வீண்காலங் கழித்தலெனக் கருதி வெறுப்புடன் மறுமொழி கூறுவதை யானறிவேன். ஆனால் ஆசிரியரவர்களிடம் இத்தகைய தன்மை சிறிதளவுமில்லை. ஆசைமேலிட்டால் தன்னைக் காண வந்தவர்களை உபசரித்தலில் இவர்களும் இவர்களின் வீட்டிலுள்ள பிள்ளைகளும் மிகச் சிறந்தவர்களென்பது ஒருமுறையாவது அங்கு சென்றார்க்கெளிதிற் புலனாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த ஆசிரியர் அவர்களின் நன்மதிப்பைப் பெற்ற பிள்ளையவர்களின் அகராதியைப்பற்றி யான் அதிகம் பிதற்ற வேண்டிய அவசியமின்று.

வாழையடிவாழையாகப் பிள்ளையவர்களின் மகனும் அறிவுடையவனாகத் திகழ்தல் கண்டு மகிழற்பாற்று. இவன் தந்தை என்னோற்றான் கொல் என யாவரும் கேட்குமாறு பாலசிங்கம் அவர்களும் கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்து விளங்குகின்றார். அரசியற்சபை அங்கத்தவராகப் பல முறை தமிழருக்குத் தொண்டாற்றியுள்ளார். கமத்தொழிலின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகின்றார். ஆயுள்வேத வைத்தியம் முன்னேறிச் செல்வதற்கு முக்கிய உதவியளிப்பவர்களுள் தலை சிறந்து விளங்குபவரிவர். சிங்களரும் தமிழரும் ஒற்றுமைப்பட்டு 'இலங்கையர்' எனும் நோக்குடன் 'லங்காதேவி'யின் முன்னேற்றத்தைக் கவனிக்கவேண்டுமென விரும்புவர். சட்ட நூல்களில் நன்கு பயின்றவராதலின் இக்காலத்துக்கியையப் பல சட்ட நூல்களை ஆக்கியிருக்கின்றார். தகப்பனாரைப் போலவே உயரிய நோக்கும் எளிய நடையுமுடையவர். பெருமையும் செருக்குமின்றி வாழ்க்கைநடத்தலால் மாணவர்களாயினும், ஆசிரியர்களாயினும், வறியோராயினும் செல்வராயினும் வேற்றுமை பாராட்டாது சந்தோஷமாக உரையாடுமியல்புடையவர். இத்தகைய பெரியார் இன்னும் பல்லாண்டுவாழ்ந்து தமிழர்க்கும் இலங்கையர்க்கும் பேருதவி புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பன்முறை பிரார்த்திக்கின்றேன்.

### ஈழகேசரி வாசகர்கட்கு ஓர் வேண்டுகோள்

பிள்ளையவர்களின் வரலாற்றை இன்னும் சிறிதவிரிவாக எழுதி நூலாக்கும் கருத்துண்டு. பிள்ளையவர்கள் பாடிய பாடல்களேனும், வேறு எவ்வகைக் குறிப்புகளேனும் இதுவரை குறிப்பிடாதனவாயிருப்பின், அவையிற் எமக்கேனும் பத்திராதிபர் அவர்கட்கேனும் அனுப்பின் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்வதோடு அவரவர்களின் பெயர்களையும் குறிப்பிடுவாம். ஈழத்தறிஞர்களின் சரித்திரம் விரிவாகவும் முற்றாகவும் வெளிவரவேண்டுமென்பதே அடியேனது அவா. பிழையான குறிப்புகள் காணப்படின் அவற்றை யெடுத்துக்காட்டி அடியேனை நன்னிலைப் படுத்தலும் வாசகர் தங்கடனும்.

(கு. ச.)

### அனுபந்தம் 1.

Mr. KATHIRAVETPILLAI combined in himself qualities which could rarely be found in one individual. He was not only a person of very high social position, but was also a gentleman of unblemished character, spotless integrity and vast erudition. Neither calumny nor jealousy could point to one incident in his private or public life, as a lawyer or government official, which could be considered unworthy of the eminent position which he had among his countrymen. He was one of whom his countrymen were justly and truly proud, and was an ornament to the Tamil community. He was a man of serene temper, calm judgment and unruffled patience. Nothing could disturb the equanimity of his mind even on occasions of the sorest trial or the greatest excitement. Although he has died full of years...he was about 80 years of age at the time of his death... and full of honours, yet his death is a great loss to the community.

Having retired a few years ago, he was fully occupied till a few days before his death in the preparation of a Dictionary of the Tamil Language. This work, though incomplete, will be a standing monument to his scholarship and persevering industry. The magnitude of the work will be seen from the fact that its first volume which is just out deals with only words beginning with the first letter of the Tamil Alphabet. He leaves behind a widow, an only son and two daughters, who are married to his nephews, Proctors Sivaprakasam and Kathiresu.

Hindu Organ 20th April, 1904.

### அனுபந்தம் 2.

Another gentleman at the Jaffna Bar who was a contempoarary of Gould and Henry Muthukistna was known as Advocate Wyman Cathiravetpillai. He was afterwards Police Magistrate of Kayts. He was a fine specimen of a Tamil and edited in later years, a Tamil English Dictionary which I believe is widely used by students and literary men and regarded as a standard work. He was an acute metaphysician and once wrote a learned treatise on the dimensions of the Soul. His costume was rather singular. He wore a long white robe reaching down to his ankles resembling one in which infants are carried to church to be baptised: and the bottom ends of it freely respond to every gust of the wind, however slight, and kept flapping about. I believe the robe was one of his inventions. He had a peculiar nasal infirmity which interfered with easy articulation but he was successful at the bar.

"Leaves from my Life"

JOSEPH GRENIER.

## Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA

*In the matter of the Intestate Estate of the late Thilliampalam Nagalingam of Ellumulli Manipay.*

Deceased.

Testamentary Jurisdiction } No 409.

**Sinnammah Widow of Thilliampalam of Ellumulli Manipay.**

Vs. Petitioner.

**1. Marimuttu Thilliampalam**
**2. Savuntharippillai both of Ellumulli Manipay.**

Respondents.

This matter coming on for disposal before C. Coomaraswamy Esquire District Judge. Jaffna, on the 15-th day of January 1937 in the presence of *Mr. R. Kannudurey* Proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner dated the 11-th and 15-th day of January 1937 having been read.

It is ordered that Letters of Administration in request of the estate of the abovenamed deceased be granted to the petitioner unless the abovenamed respondents or any other person shall on or before the 10-th day of February 1937 appear before this Court and show cause to the satisfaction of this Court to the contrary.

This 29-th day of January 1937.

**Sgd. C. Coomaraswamy**
*District Judge.*

10-2-37

Order Nisi Extended for 12-3-37.

**Sgd. C. C.**
D. J.

(276) 28-2-37—2.


## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப்படுத்தினோம்.

இது சலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்தேமுஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு. சாத்தாவாளி, நீர்முள்ளி விதை, நாகம்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவள பஸ்பம் வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம். சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையானவியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள்.

இதன்விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் ராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியாடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை
இலக்கம் 33. பழைய வாடி ரோட்டு,
கோட்டைமுனை, மட்டக்களப்பு.

7-3-37-4.



யாழ்ப்பாணம் இரகுநாதையர்
ஈசுர வருஷ
வாக்கிய பஞ்சாங்கம்

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைநாளில் பந்துவிளையாடிய முறை

## திரு. சேதுராமன் செட்டியார் பிரசங்கம்

கொழும்பு 28—2—37.

[இன்று இந்நகர் செட்டிநாடு இளைஞர் விளையாட்டுச் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அதுபோது இவண் தனவைசிய இளைஞர் சங்க உழைப்பாளியும், பிரபல எழுத்தாளியும், தேசாபிமானியுமகன ஸ்ரீமான் எம். ஆர். சேதுராமன் செட்டியாரவர்கள் "பண்டைநாளில் பந்து விளையாடியமுறை" பற்றி ஓர் உரையாற்றினர். அதின் சாரம் பின்வருமாறு.]

இந்நாட்டுக் கல்விச் சாலைகளில் கலை பயிலும் பல இலைஞர்கள் உடல் நலம் பேணும் ஊக்க மற்றவராய், அல்லும் பகலும் அருங்கலைகளையே கண்ணும்கருத்துமாய்ப் பயின்று வருகின்றார்கள் என்பது உண்மையாகும். மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாது கல்வி கற்று உடல் நலிந்து சாறுபிழிந்த பழம் போல் பொலிவிழந்த மாணவரே பெரும்பாலராவர். இவ்வாறு உடல் நலம் பேணுது உயிர்வாழும் வழக்கம் தமிழ்மக்களது தொன்மைசான்ற வழக்கமென்றும், ஆங்கில மக்களோடு பலகால் பழகியும் உடல் நலம் பேணும் உயரிய ஒழுக்கத்தை நாம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறை கூறப்படுகிறது. இவ்வாறுரைப்போர் இந்நாட்டின் பழைய பழக்க வழக்கங்களை அறியாத விரிவிலா அறிவினர் என்பது நன்கு விளக்குவதாகும். கந்த மூலம் உண்டு கடுந்தவம் புரிந்த முனிவரும் உடலின் பெருமையை உணர்ந்து அதனைப் போற்ற வேண்டுமென்று அருளிய பொன்னுரைகள் ஆன்றோர் நூல்களில் ஆங்காங்கு இலங்குகின்றன.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பைவளர்த்தேன் உயிர்வளர்த்தேனே"

என்பது தமிழ்நாட்டு முனிவர் அருளிய திருமந்திரமாகும்.

ஆகவே பழந்தமிழ் மக்கள் உயிரைப் பேணியவாறே உடலையும் பேணினார்கள் என்பதும், உடலை இகழத் தலைப்பட்ட பேதைமை இடைக்காலத்தில் புகுந்த பாழானகொள்கையேயாம் என்பதும் அருங்கலை தேரும் அறிஞர்க்கு இனிது விளங்குவதாகும். உடம்பைச் செம்மையாய்வளர்ப்பதற்கு நல்லூணும் நற்பயிற்சியும் இன்றியமையாதனவென்பது சொல்லாமலேயமையும். இத்தகைய உடற்பயிற்சிக்கேற்ற உயரிய விளையாட்டுகள் பல அக்காலத்திய தமிழ்மக்கள் வாழ்க்கையில் அமைந்து விளங்கின.

இக்காலத்தில் இளைஞர் விரும்பி விளையாடும் பந்தாட்டம் பழந்தமிழ் நாட்டிலேயே வழங்கியதாக அறியப்படுகின்றது. மன்னன் வாழும் மணி நகரத்தில் அமைந்திருந்த அரும்பொருள்களில் பந்தாடும் இடமும் ஒன்றாய் விளங்கிற்று. இவ்வாறு அமைந்த அரங்குகள் பத்திகளாய் வகுக்கப்பட்டுப் பத்தி தோறும் பசும் பொன்னும் பன்மணியும் இழைக்கப்பட்டு, விளிம்பில் முத்து அழுத்தப்பட்டுக் கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்து விளங்கின. இதனை,

"முத்தம்வாய் புரிந்தன
மொய்கதிர்ப் பசும்பொனால்
சித்திரத் தியற்றிய
செல்வம்மல்கு பன்மணி
பத்தியிற் குயிற்றிவான்
பதித்துவைத்த போலவன்
இத்திறத்த பந்தெறிந்து
இளையாடு பூமியே"

என்று சிந்தாமணிசெம்மையாய் உரைக்கின்றது. இவ்வாறு வ[illegible]த்த அழகிய அரங்கத்தி[illegible]ந் தரேயன்றி மங்கையரும் பந்து விளையாடி மகிழ்ந்தார்கள் என்பது,

"மாநெடு மழைக்கண் நோக்கி
வானவர் மகளு மொப்பான்
பானெடும் தீஞ்சொ லாள்ஓர்
பாவைபந் தாடுகின்றான்"

என்னும் அழகிய பாவால் இனிது விளங்கும்.

இவ்வாறு அரங்கில் விளையாடுவதேயன்றி மங்கையர் சிறு பந்துகளை மேலே வீசிப் பிடித்து விளையாடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்ததென்று விளங்குகின்றது. இப்பந்துகள் தூயவெண்மை வாய்ந்தனவாய்ப் பளிங்குபோல் இலங்கிய பான்மையையும், சார்ந்ததன் வண்ணமாய் விளங்கிய தன்மையையும்,

"மைபரி நெடுங்கண் நோக்கிப்
படுதலும் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டும்
கந்துகம் பலவும் கண்டார்"

என்று கவி வியந்துரைக்கின்றார்.

அஞ்சனம் எழுதிய அழகிய கருங்கண் அமைந்த மங்கையர் பளிங்கு போன்ற பந்துகளை மேலே எறிந்து அவற்றை மீண்டும் செந்தாமரை போற் சிவந்த கைகளால் ஏந்திப் பிடித்தபோது, அப்பந்துகள் அடைந்த நிறவேற்றுமையைக் கம்பர் அழகுற எழுதிப் போந்தார். இயற்கையாலும் செயற்கையாலும் கருநிறம் வாய்ந்த கண் எதிரே வந்தபோது, அப்பந்துகள் அந்நிறத்தை ஏற்றுக் கருமையாய் விளங்கின என்றும், அப்பால் அம்மாதரது சிவந்த கையிற் சேர்ந்தபோது அந்நிறத்தை ஏற்றுச் செம்மையாய் விளங்கின என்றும் கவி அருளிய நயம் கனிந்து கிசழ்வதாகும். தீயரைச் சேர்ந்தோர் தாமும் தீயர் ஆவது போலவும், செய்யரைச் சேர்ந்தோர் தாமும் செய்யராய்த் திகழ்வது போலவும் பளிங்கி போன்ற பந்தும் இனத்தியல் பெற்று இலங்கிற்று.

இவ்வாறு மாதர் மகிழ்ந்து பந்தாடும்பொழுது இறைவனையும் மன்னனையும் வாழ்த்திப் பாடும் வழக்கமும் அக்காலத்திலிருந்ததாக அறியப்படுகின்றது. நீதிவழுவியதென்று அறிந்த நிலையே உயிர் துறந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனை வாழ்த்தப் போந்த மாதர்,

"பொன்இலங்கு பூங்கொடி
பொலஞ்செய் கோதை வில்லிட
மின் இலங்கு மேகலைகள்
ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கஎன்று
சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே"

என்றும்,

"பின்னும் முன்னும் எக்கணும்
பெயர்ந்து வந்து எழுந்துளாய்
மின்னும்மின் னிளங்கொடி
வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்கஎன்று
சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே"

என்றும் பாடி மன்னனை வாழ்த்திய பான்மையைச் சிலப்பதிகாரக் கந்துவரியிற் காணலாம்.

இவ்விருவகை விளையாட்டோடு காலாற் பந்தடித்து விளையாடும் வழக்கமும் இளைஞரிடம் அமைந்திருந்தது. பந்தைக் காலால் எடுப்பதும், கையினாலடிப்பதும், தலையாற்றட்டுவதும், பறந்து போகுமாறு அடிப்பதும் ஆகிய பலவகை விளையாட்டுக்களை இளைஞர் விரும்பியாடி எல்லையற்ற இன்பமுற்றார்களென்பது,

"வைத்தபந் தெடுத்தலும்
மாலையுட் காத்தலும்
கைத்தலத்தின் ஒட்டலும்
கண்ணிநெற்றி திட்டலும்
பத்தியிற் புடைத்தலும்
பையரவ் விளைடலும்
இத்திறத்த பந்தினோடு
இன்பம்எல்லை இல்லையே"

என்னும் சிந்தாமணியால் இனிது விளங்கும். இப்பொழுது காற்பந்தாடும் முறையில் மத்தியில்வைத்த பந்தைக் காலால் எடுப்பதும், எடுத்த பந்தை மாற்றார் தவறுதவண்ணம் கொண்டு செல்வதும், நீள அடிப்பதும், உயர அடிப்பதும், உயர்ந்துவரும் பந்தைத் தலையால் அடிப்பதும் அமைந்திருக்கக் காண்கிறோம். இது போன்ற பந்தாடும்முறை அக்காலத்தும் இருந்ததென்பது இதனாற் சிறந்து விளங்குகிறது. காலாலெடுக்கும் பந்து போல, கைப்பந்து எடுத்து விளையாடு முறை இப்பொழுதும் ஆங்கிலமக்கள்பால் வெகுவாய் வழங்கக்காணலாம். பந்தைக் கையில் தாங்கி மாற்றாரது பத்தியிற் புகுந்து அவர் கைப்பற்றுவண்ணம் காந்தும் வீசி எறிந்தும் விளையாடுவதே கைப்பந்தாடும் முறையாகக் கருதப்படுகிறது. இம்முறையும் தமிழ்நாட்டில் வழங்கி இருந்ததாக விளங்குகின்றது.

இன்னும் இக்காலத்தில் பந்து முதலிய விளையாட்டு விரும்பும் இளைஞர் அகன்று பெரியதாய ஆடைகள், ஆட்டையைத் தடைசெய்யுமென்று கருதி, இடையினின்றும் முழந்தாள் அளவாக வுள்ள சிற்றுடை உடுத்துச் செல்வதைக் காண்கின்றோம். இத்தகைய சிற்றுடை அக்காலத்தில் தமிழ்நாட்டு வீரரால் 'வட்டுடை' என்னும் பெயரால் வழங்கிற்றென்பது பழந்தமிழ் நூல்களில் விளங்குகிறது.

சிந்தாமணியின் காளையாய் இலங்கும் வீரனை "வட்டுடைப் பொலிந்த தானை வள்ளல்" என்றும்,

"வட்டுடை மருங்குல் சேர்த்தி
வான்இரு புடையும் வீக்கி
தட்டுடைப் பொலிந்த திண்தேர்
தனஞ்சயன் போலஏறிக்
கட்டளைப் புரவி சூழ்ந்து
கால்புடை காப்ப ஏவி
அட்டுயிர் பருகும் கூற்றம்
சோர்எழுந் தனைய தோந்தான்"

என்றும் ஆசிரியர் கூறுமாற்றால் வட்டுடையின் தன்மை இனிது விளங்குவதாகும். வட்டுடையின் இயல்பைக் கூறப் போந்த நச்சினார்க்கினியர் முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடை என்று உரைவரைந்திருத்தலும் ஈண்டு உணரத்தக்கதாகும். ஆகவே இக்காலத்திய போர் வீரரும் பந்தாடும் இளைஞரும் உடுக்கும் சிற்றுடையின் நலங்களை அக்காலத்திய தமிழ் மக்களும் அறிந்திருந்தார்கள் என்பது நன்கு விளங்கும். இதுபோன்ற விளையாட்டுக்களில் இச்சங்க அங்கத்தவர்கள் ஈடுபட்டு நற்பயிற்சி பெறுவார்களென நம்புகிறேன். இச்சங்கம் பல்லூழிவாழப் பரம்பொருள் துணைவேண்டும்.

## எங்கள் எதிர்காலம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது ஸ்தாபனங்களுங்கூடக் கெட்டொழிகின்றன. எங்களுக்குரிமையாயுள்ள நன்மதிப்பை நாம் இழந்துவிட்டோம். ஆகவே அதைப் பழையபடியும் சம்பாதிப்பது கஷ்டமான காரியமாகும். நம்மினத்து வியாபாரிகளை நாம் அபிமானிக்க முன்வருவதில்லை. சிலசமையங்களில் அப்படிச் செய்யினுங்கூட வாங்கின பொருட்களின் விலையைக் காலத்திற் கொடுக்கிறதில்லை. கடனைக் கேட்க வரும்பொழுது வியாபாரியைப் பற்றியும் வாங்கிய பொருட்களைப் பற்றியும் இழிவாய்க் கூறுவது வழக்கமாயிருக்கிறது. அந்நிய வியாபாரியிடத்தில் பற்று வரவு செய்யும்பொழுதெனிலோ இவ்வித சச்சரவுகள் நிகழ்வதில்லை. கொடுக்கவேண்டிய பணத்தைக் குறித்த காலத்தில் செலுத்தப் பிரயத்தனப்படுகின்றோம். தவறின் அதற்காகத் தகுந்த சமாதானம் சொல்வோம். இந்நிகழ்ச்சிகளெல்லாம் எம்முள் மலிந்துகிடக்கும் பொறாமையினால் விளைவன. பிறசாதியினர் நம்மை ஏழனஞ்செய்வதிலிருந்தாயினும் நாம் கண்விழிக்கின்றிலம். திண்ணமாய் இக் கேவலச் செயல்களை நாம் விட்டொழித்தல்வேண்டும். தாய்நாட்டபிமானம் பூணவேண்டும். எமது சாதியினரின் தொழில்களை நாம் ஆதரித்தே தீரவேண்டும். இத்துறையில் யப்பானியரிடமிருந்து நாம் நல்ல பாடங் கற்றுக்கொள்ளலாம். தன் சாதியினரின் தொழில்களை ஆதரிப்பதில் யப்பானியர் மற்றஞ் சாதியினரைவிட மேலானவர்கள். அவர்கள் தம்மினத்தாரிடங் கிடைக்கக்கூடிய சாமான்களைப் பிறரிடத்திலிருந்து வாங்குவதில்லை. வாங்கி விற்பதுமில்லை தங்கள் சாதியினரிடம் கிடையாத பொருட்களைமாத்திரமே அவர்கள் பிறசாதியினரிடமிருந்து பெற்றுக்கொள்வர். (தொடரும்)


சுத்தமான
கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னுகம்.

(50) 1-12-35×12-36.



சரித்திர கதாவாசகம்


ஆசிரியர்: இ. தர்மலிங்கம் அவர்களால்
புதிய சரித்திரபாடத்திட்டத்திற்கு ஏற்ப எழுதப்பட்டவை

இரண்டாம் வகுப்பு சதம் 25
மூன்றும் வகுப்பு சதம் 30
நான்காம் வகுப்பு சதம் 40

வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
சுன்னுகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற், புண்ணென் றுணரப் படும்.



*Insist on the all-Steel British Made World Renowned*

**DAYTON CYCLES**

FOR

**STRENGTH, SPEED & APPEARANCE.**

**'DAYTON' is the Cheapest British Made Cycle now available in the Market.**

**INQUIRIES INVITED. : : HIRE PURCHASE TERMS ARRANGED.**

பெலத்திற்கும், ஓட்டத்திற்கும், தோற்றத்திற்கும்
இங்கிலாந்தில் செய்யப்பட்ட
உலகக் கியாதிபெற்றது

**டெயிற்றன் சைக்கிலே!**

உத்தரவாதமுள்ளது.
மார்க்கட்டில் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய
பிறிட்டிஷ் சைக்கில் இதுவே!

இன்ஸ்ரோல்மென்ற் ஒழுங்குகள் செய்துகொள்ளலாம்.

வடமாகாண சோல் ஏசண்டுகள்

**மு. பாலகிருஷ்ணன் அன்ட் பிரதர்ஸ்**

(ஏசன்ஸ் டிறெக்ற் இம்போர்ட்டஸ் அன் மேர்ச்சன்ஸ்.)

சைக்கில்கள், அவைக்குரிய சாமான்கள், மோட்டார்க்கார், டிறக்ஸ்கள்,
இலெக்றிக் சாமான்கள், பற்றறிகள், கிருமபோன், றேடியோ,
சிங்கர் தையல் மேசின்கள், அவைக்குரிய சாமான்கள் புறூடென்ஸல்
வீமா கோம்பனி ஏசண்டுகள்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

*Sole Agents for Northern Province:*

**M. BALAKRISHNAN & BROS.**

*(Agents, Direct Importers & Merchants)*

*Dealers in Cycles and Accessories, Motor Cars, and Trucks, Electrical Goods & Batteries, Gramaphones & Radio Sets. Representatives to Prudential Assurance Co. Ltd. & Singer Sewing Machine Co.*

*GRAND BAZAAR, JAFFNA.*

(240) 3-1-37


## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 7306

உடுவில்

1. வேலுப்பிள்ளை மாணிக்கமும்
2. பெண் தங்கமுத்துவும்

வழக்காளிகள்

1. உடுவில் தற்காலம், டாம் ஸ்றீற் கொழும்பு சின்னத்தம்பி தம்பிமுத்து
2. உடுவில் கந்தையா அருளம்பலம் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிமுத்து பெண் முத்துப்பிள்ளையின் ஆதனத்தின் பிரதிகாரியஸ்தன்.

எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 7306ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1937-ம் ௵ சித்திரைமீ 3-ந் உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறைவத்தனை பரப்பு கில இலாச்சம் 8 செய்பயிர் வான்பயிர்களும். வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றிற்பங்கும் எல்லைகிழக்கு கந்தையா பெண் அன்னப்பிள்ளையினுதனம், வடக்கு கை ஒழுங்கை, மேற்கு சின்னத்தம்பி வயிரமுத்துவினுதனம், தெற்கு முருகர் கல்லதம்பியினுதனம். இது அடங்கலும்.

க. போன்னப்பா
கொமிஷனர்.

இணுவில், யாழ்ப்பாணம்,
1937-ம் ௵ பங்குனிமீ 3-ந் உ

(281) 7-3-37

## வலிகாமம் கிழக்குப் பகுதித் தமிழாசிரியர் சங்கம்

மேற்குறித்த சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் சென்ற 27-2-37 சனிக்கிழமை முற்பகல் 10-மணியளவில் நீர்வைச் சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் வித்தியாதரிசி திரு. K. கிருஷ்ணபிள்ளையவர்களது அக்கிராசனத்தின் கீழ் ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் சமுகமளித்தனர்.

காரியதரிசியவர்களால் அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதும் பண்டிதர் சோ. பாலசுப்பிரமணியம் (இளமுருகனார்) அவர்களால் "பாட்டு முறையும்" என்னும்விஷயத்தின் பேரில் கனிந்த இனிய மொழிகளினால் சபையார் வியந்து பாராட்டக்கூடிய முறையில் நீண்டவோர் பேருரை நிகழ்த்தப்பட்டது.

பின்னர், அக்கிராசனர் அவர்கள், முற் குறிப்பிட்ட விஷயத்தில் சிறிது குறிப்புரை கூறிக் கல்வி பயிற்றல் என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு கலந்துரையாடல் முறையில் நீண்ட சொற்பொழிவாற்றினர். அதில், நாம் படிப்பிக்கும் பாடங்களெல்லாம் சுகாதாரம், அறிவு, தொழில், சுவை, ஒழுக்கம் என்னுமிவை ஐந்தினுள்ளே மடங்குமெனக் குறிப்பிட்டனர்.

பின்னர் காரியதரிசியவர்களால், பேச்சாளருக்கும் தலைவருக்கும் நன்றி கூறப்பட்டதும் சங்கம் பி. ப. 1-15 யளவில் இனிது நிறைவேறியது.

கடித.

## சைவப்பிரசங்கம்

நிகழும் தாது வருஷம் மாசி மாதம் 15-ந் திகதி (26—2—37) வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை மண்டபத்தில், மேற்படி வித்தியாசாலைத் தமிழ் சமஸ்கிருத பண்டிதரும், பயிற்றப்பட்ட ஆசிரியருளொருவருமாய பிரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்களைத் தலைமையாகக் கொண்டு தேவார பாராயணத்துடன் பிரசங்கமாரம்பமாயது. தலைவர் முன்னுரையின் பின், செந்தமிழ்ப் பூம்பொழில் ஆக்கியோனுய பண்டிதர் ஆ. சீ. நாகலிங்கம்பிள்ளையவர்களால் "சைவசமய மாட்சி" யென்னும் விடயம் தக்க ஆதாரங்களுடன் விரைத்துரைக்கப்பட்டது. ஆண்கள் பெண்கள் பிள்ளைகளாய்க் குழுமியிருந்த சபையின் அமைதியே பண்டிதரின் வன்மையை விளக்கியதென்க. பின்னர் மேற்படி வித்தியாசாலைத் தலைமை யாசிரியர் திரு. க. கார்த்திகேசு அவர்களால் சகலர்க்கும் துதி கூறப்பட்டது. ஆசிரியர்களி லொருவராகிய திரு. ஆ. தெட்ஷணமூர்த்தி அவர்கள் தேவார பாராயணம் செய்யக் கூட்டம் 9 மணியளவில் முடிவெய்தியது.

—கடித.


**ஈழமண்டல திருத்தல தேவாரமும், திருப்புகழும்**

விலை சதம் 5

திருலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 9682.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி.

(1) J. துரைஐயா-பேரின்பநாயகம்
(2) பெண் அலிஸ் பரிமளம்

வழக்காளிகள்.

காங்கேசன்துறை தற்போது நீர்கொழும்பு பொலிஸ் இன்ஸ்பெக்றர்

(1) பெஞ்சமீன் இராசரத்தினம் மதியூஸ் சீனிவாசகம்
(2) பெண் எலிசன் அருணசலம் சீனிவாசகம்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 9682-ம் இலக்க வழக்கில் 1937-ம் வருஷம் தைமாதம் 12-ந் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1937-ம் வருஷம் பங்குனிமாதம் 22-ந்திகதி திங்கட்கிழமை முற்பகல் 9-மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோயிற்பற்று தையிட்டி இறை "வன்னன் கிணற்றடி" நிலப்பரப்பு 4½-பும் புதிய கல்வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும், எல்லை: கிழக்கு நாகமுத்தர் வயித்திலிங்கத்துக்குடைய ஆதனம். வடக்கு தம்பர் கைம்பெண் இலட்சுமிக்குடைய ஆதனம். மேற்கு றோட்டு, தெற்கு ஒழுங்கை. இதனடங்கலும்.

V. K. Chinnathamby
Auctioneer

யாழ்ப்பாணம் 1937௵ பங்குனிமீ 1௨

(280) 7-3-37-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிற்கு ஆபரணந் தாட்சிணியம் அஃதில்லாவிடி லக்கண் புண்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 7 } Chunnakam, Jaffna, 7th March 1937, Sunday. { No. 32

## THE LANKA BENEFIT CORPORATION Limited.,

தி லங்கா பெனிபிற் கோர்பரேசன் லிமிற்றெட்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| அதிகாரம்பெற்ற மூலதனம் | Rs. 5000000.00 |
| Issued Capital | 3000000.00 |
| Reserved Capital | 2000000.00 |
| Subscribed Capital | 1000000.00 |
| பங்கு ஒன்றின் விலை | 10.00 |

மேற்படி சமுதாய நிர்வாகசபை அங்கத்தினர்:–

1. Dr. S. சுப்பிரமணியம், Retired Provincial Surgeon, 'Octagon' Jaffna.
2. திரு V. சோமசுந்தரம், Pensioner, F. M. S. Thirunelvely, Jaffna.
3. திரு A. M. சாமுவேல், Head Master, A. M. School, Navaly, Manipay.
4. திரு P. சுப்பிரமணியம் Retired Tea Maker, Alaveddy.
5. திரு T. செல்லப்பா, Manager, Central Co-oporative Stores Ltd., Jaffna.
6. திரு,S.வேலுப்பிள்ளை, Teacher,Myliddy, Kankesanthurai.
7. திரு S. S. K. வாளரசன் Head Master, M. M. School, Vannarponnai.
8. திரு J. C. செல்லையா, Pensioner Sandilipay, Manipay.
9. திரு T. செல்லத்தம்பி, Managing Director.

மிகுந்த ஆதாயமடைய பங்குகட்கு மூந்துங்கள். தாமதஞ் செய்து கவலைப்படாதீர்கள். இழந்து போனதை மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டுமானல் இச்சமுதாயத்தில் இன்றே சேர்ந்து கொள்ளுங்கள். ஒருவர் நூறு பங்குகட்குமேல் பெறுதல் அரிது.

**ஏஜண்டுகள் தேவை**

மாதமொன்றிற்கு ரூபா 50/- க்குக் குறையாத சம்பளம் கொடுக்கப்பெறும். இச்சமுதாயத்தைப்போல் எச்சமுதாயத்திலும் இவ்வளவு உயர்ந்த சம்பளததை ஏஜண்டுகள் பெறுதல் அரிதிலும் அரிது. வேண்டிய விபரத்திற்கு விரைந்து மேற்படி காரியாதிகாரிக்கு எழுதவும்.

த. செல்லத்தம்பி
காரியாதிகாரி.

14-2-37

## Sri Lanka Book Depot

ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும் வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனு முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம் நம்பர் நூல் வகைகளும், யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கமும், திறம் இங்கிலீஷ் மேக் குடைகளும் யப்பான் மேக் குடைகளும் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்

(22) 19-2-34

நீர் அழிவுக்கு

சுவாமி பரிபூரணனந்தர் அவர்களது

## அப்ரேக் செந்தூரம்

**கைகண்ட அரிய மருந்து**

20 நாள் 40 வேளை மருந்து விலை ரூபா 16—0—0

"இந்தமருந்தை ஒரு சாய்புக்குக் கொடுத்ததில் 15 நாட்களில் அவருக்குச் சர்க்கரை யில்லாமல் நீர் சுத்தமாயிருக்கிறது" என்று

புதுக்கோட்டை, தலைமை வைத்திய சுகாதார அதிகாரி
**டாக்டர் எம். ஜி ராமச்சந்திரராவ்** எம். பி. சி. எம்.
எழுதுகிறார்.

இதற்கும் மற்றும் பல வியாதிகட்கும் மருந்து வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

ஏழைகட்கும், யாத்திரீகர்கட்கும் இராமேசுரத்தில் இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

**சுவாமி பரிபூரணநந்தா,**
ஸ்ரீ ராமகிருஷ்ண சித்த வைத்தியசாலை, இராமேசுரம்.

(63) 9-8-36—7-37.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

நீண்டகாலமாய் ஆவலுடன் யாவரும் எதிர்பார்த்திருந்த

## அருணோதயம்

அல்லது

## சிம்மக்கொடி

என்னும்

வீரந்ததும்பும் சிறந்தநாவல்

இதுவரை வெளிவந்துள்ள நாவல்களுக்கெல்லாம் சிரோரத்தினமாய் விளங்குவது.

வரணியூர், திரு. எ. சி. இராசையா அவர்களால் எழுதப்பட்டது.

16 அத்தியாயங்கள் 331 பக்கங்கள் கொண்டது.

விலை ரூபா 1-50

"ஈழகேசரி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-25

முந்துங்கள்! முந்துங்கள்!!

"ஈழகேசரி" நிலையம், சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யி லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1937-ம் ஞு மார்ச்சு 7-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளிப்பட்டது.